# 'திரு'வின் நடவடிக்கைகளையே பின்பற்றுகிறேன்


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49

போன் : 389

மலர் 12

இதழ் 202

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 16 ஜமா. ஆகிர் 29 செவ்வாய்க்கிழமை (1-9-70)










## அமைச்சர்பீலிக்ஸ் கூறுகிறார்

பொலநறுவ, திங்கள்

முன்னைய அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராய் இருந்த திரு திருச்செல்வம் உள்ளூராட்சி எழுதுவினைஞர்கள் விடயத்திலும் தமிழ்மொழி விசேட விதிகள் விடயத்திலும் எவ்வாறு நடந்து கொண்டாரோ அதே வழியில்தான் நான் நடந்து வருகிறேன் என உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகில இலங்கை பட்டின சபைச்சங்க ஐந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் இரண்டாவது நாளில் கலந்துகொண்டு அமைச்சர் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி ஊழியர்களுக்கு கொடுபடவேண்டிய நிறுத்திவைக்கப்பட்ட சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு உள்ளூராட்சிசேவை அதிகாரசபைக்கு உத்தரவிடுமாறும் தமிழ்ப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களில் வேலைசெய்யும் எழுது வினைஞர்கள் தாம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படையை மீறி சிங்களத் தேர்ச்சிபெற உள்ளூராட்சி சேவை வற்புறுத்துவதை சபைத் தலைவர்கள் எதிர்க்க வேண்டும். என்ற சுன்னாகம் பட்டினசபையின் தீர்மானத்தை தலைவர் சமர்ப்பித்துப்பேசியதற்கு அமைச்சர் பதிலளித்தார்.

திரு பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:

உள்ளூராட்சிமன்றங்களில் ஏற்பட்ட பிரச்னைகளைத் தீர்க்கமுடியாத நிலையிலேயே அவை கலைக்கப்பட்டன, இவை தனிப்பட்ட காரணத்துக்காகவோ, அரசியல் காரணத்துக்காகவோ கலைக்கப்படவில்லை. என் மன விருப்பத்துக்கு மாறாகவே இவை கலைக்கவேண்டி ஏற்பட்டது.

இவ்விழாவில் உள்ளூராட்சிச் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. ஷேர்லி டி. அல்விஸ் கலந்துகொண்டார். நாடு பூராவுமுள்ள பட்டின சபைகளின் தலைவர்கள் பெரும்பாலும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் தமிழில் நன்றிதெரிவித்துப்பேசினார்.

# வடக்கில் எண்ணெய்வள ஆராய்ச்சி தாமதமாகலாம்

## பிரஞ்சு நிபுணர் அறிக்கையை சோவியத் குழு பரிசீலிக்கும்

கோட்டை, திங்கள்

இலங்கையின் வடக்குக் கரையோரப்பகுதிகளில் எண்ணெய்வயல்கள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிவேலைகள் நிறுத்தப் பட்டிருப்பதாகவும் இன்னும் குறைந்தது இரண்டுவருடகாலத்துக்கு இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட மாட்டாதென்றும் பெற்ரோலியம் கூட்டுத்தாபன வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. எண்ணெய் வயல்கள் கண்டுபிடிப்பு சம்பந்தமாக அரசாங்கம் இதுவரை கொள்கையறிக்கை எதுவும் வெளியிடாததுதான் இந்தஆராய்ச்சி வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதற்குக் காரணமென்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரஞ்சு நிறுவனம் ஒன்றின் நிபுணர்களால் நடாத்தப்பட்ட பூர்வாங்க பரிசீலனையின் பின் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையை ஐ. நா. நிபுணர்களும் பரிசீலனை செய்து இலங்கையின் வடக்குப் பகுதியில் எண் ... தாகத் தெரிகின்றது. ஆனாலும் [illegible] சம்பந்தமாக இறுதியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லையென்றும் அறியப்படுகிறது.

ஆனாலும் பிரஞ்சு நிபுணர்கள் சுமார் இரண்டுலட்சம் ... முடித்த பூர்வாங்க பரிசீலனை அறிக்கையை சோவியத் நிபுணர்களின் பரிசீலனைக்கு விடுவதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானித்திருப்பதாகவும் சோவியத் நிபுணர் குழுவொன்று விரைவில் இங்கு வர விருப்பதாகவும் அறி...

## வரி செலுத்துவதில் வழக்கறிஞர்கள் தில்லுமுல்லு

### சட்டநடவடிக்கை பற்றி அரசு ஆலோசனை

கோட்டை, திங்கள்

வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் தாம் அறவிடும் கட்டணங்கள் பற்றியும், உறுதி எழுதுவதற்கு அறவிடும் கட்டணங்கள் பற்றியும் அறிக்கைகள் சமர்ப்பிக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுவார்கள் என்று தெரிகின்றது. வழக்கறிஞர்களல்லாத நொத்தாரிஸ்மார்களும் இவ்வாறு பணிக்கப்படுவார்கள்

இதுசம்பந்தமாகவருமான வரி சட்டதிட்டங்களின்கீழ் புதியஷரத்துக்களை கொண்டுவருவதற்கு அரசாங்கம் ஆலோசிக்கின்றது. இதுசம்பந்தமாக அட்டோர்ணி ஜெனரலின் ஆலோசனையை பெற்று சட்ட ஷரத்துக்களை உருவாக்கும்படி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் பணிக்கப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகின்றது

மாதாமாதம் கட்டணமாக ஆயிரக்கணக்கான ரூபாய்களை உழைக்கும் வழக்கறிஞர்கள் தமது வருமானத்தை ஒளித்துக்கொண்டு, சிறிய தொகைகளுக்கே வரிசெலுத்திவருவது தெரியவந்துள்ளதாம். இவர்களுக்கு வழக்குக் கட்டணங்களைச் செலுத்துவதின்மூலமே வீடுகளையும் காணிகளையும் விற்று ஏழை மக்கள் பலர் கண்ணீர்சிந்த வேண்டியநிலைமை ஏற்பட்டிருப்பதாக அரசாங்கத்துக்கு தெரியவந்துள்ளதாம்

## ஜப்பான் எக்ஸ்போ-70ல் இலங்கைதினம்

ரோக்கியோ, ஆக,31

ஜப்பான் நாட்டில் நடைபெறும் எக்ஸ்போ-70 விழாவில் இன்று இலங்கைத் தினமாகும், இத் தினத்தையொட்டி ஜப்பானில் இலங்கைத் தூதுவராக இருக்கும் திரு. தென்னக்கூன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்,

தூதுவர் இவ் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் இலங்கைக்கு ஜப்பான் அளிக்கும் பொருளாதார தொழில்நுட்ப உதவி மேலும் அதிகரிக்குமென நம்புகின்றேன் என்றார்.

இவ் விழாவில் இலங்கை கலந்துகொண்டு சிறப்பித்ததமைக்குஜப்பான்பொருளாதார விசேட ஆலோசகர் திரு மசூர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் எதிர்காலத்தில் மேலும் பொருளாதார தொழில் நுட்ப உதவிகளை ஜப்பான் இலங்கைக்கு முடிந்த அளவில் கும் என்றார்.

மலேஷிய பிரதம மந்திரி

## துங்கு அப்துல் ரஹ்மான் அடுத்தமாதம் விலகுவார்

### துன் ரஸாக் புதிய பிரதமர்

கோலாலம்பூர், ஆக. 31

மலேஷிய பிரதமமந்திரி திரு. துங்கு அப்துல் ரகுமான் அடுத்த மாதம் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவிருக்கிறார்.

சுமார் 15ஆண்டுகளுக்கு மேல் மலேஷிய பிரதமராக இருந்த துங்கு கடந்த சில ஆண்டுகளாகவே நெருக்குதலுக்குள்ளாகிவந்துள்ளார்.

துங்கு அப்துல் ரகுமானுக்கு பிறகு இப்பொழுது துணை பிரதமராக இருந்து வரும் துன்அப்துல் ரஸாக் பிரதம மந்திரியாக பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடியில்

## பஸ் கார் மோதலில் இருவர் பலி, ஒருவர் காயம்

கைதடி, செவ்.

இ. போ. ச. இரட்டைத் தட்டு பஸ்சும் கார் ஒன்றும் மோதியதில் ஒருவர் பலியா ... யில் அனுமதிக்கப்பட்டனர் கைதடி நுணுவில் பாலத்தில் இச் சம்பவம் நேற்றிரவு நடைபெற்றது.

## கலைக்கப்படவில்லை

கட்டைவேலி, வெள்ளி

துன்னாலைமேற்கு நுணுவில் பிள்ளையார் கோயில்தொண்டர் சபையின் நிர்வாக சபை கலைக்கப்பட்டதாக 'ஈழநாடு' பத்திரிகையில்

'தமிழ்ப் பட்டதாரிகளுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதற்கு அரசாங்கம் ஆலோசிக்கின்றது. இது சம்பந்தமாக அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையை

மக்கள் பலர் கண்ணீர் சிந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக அரசாங்கத்துக்கு தெரியவந்துள்ளதாம்

# ‘தமிழ்ப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்குக’

மாவிட்டபுரம், திங்கள்

‘அகில இலங்கையிலுமிருந்தும் 5000 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்போது தமிழ்ப் பண்டித பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டும்’ என கல்வியமைச்சரை கோரும் மகஜரொன்றை அகில இலங்கை தமிழ்ப் பட்டதாரிகள் சங்கம் கல்வியமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படுகின்ற பண்டித பரீட்சையில் சித்தி யெய்தினோரில் 40 பேர் நியமனம் பெருது இருப்பதாகவும் இவர்கள் க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியெய்திய பின்பு 5 வருடங்கள் கல்விப் பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

‘இன்றுவரை பட்டம் பெற்ற பண்டிதர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூபா 110 தொடக்கம் ரூபா 224 வரை வழங்கப்படுகிறது. ஆனல் இத்திட்டத்தின்படி 1963-ம் ஆண்டுக்குப் பின்னர் எவருக்காயினும் நியமனம் வழங்கப்படவில்லை

தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், சமயம், சரித்திரம், தமிழ் வரலாறு முதலிய பாடங்களோடு இரண்டாவது மொழியாக சிங்களம் அல்லது ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதம் ஆகிய பாஷையிலும் சித்தியெய்தியுள்ளோம்.

தற்போது அரசாங்கம் 5000 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்போது தமிழைக் கற்று வேறு ஊதியம் பெற முடியாது கஷ்டப்படும் எங்களுக்கு தமிழ்ப்பண்டித பட்டதாரிகளுக்கு உரிய அடிப்படை சம்பளத்தில் நியமனம் வழங்குமாறு கோருகிறோம்.

நின் நிபுணர்களால் நடாத்தப்பட்ட பூர்வாங்க பரிசீலனையின் பின் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையை ஐ. நா. நிபுணர்களும் பரிசிலனை செய்து இலங்கையின் வடக்குப் பகுதியில் எண்ணெய் வளம் இருப்பதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த அறிக்கையை முன்னைய அரசாங்கம் பிரஸ்தாப பிரஞ்சு நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தது. கூட்டணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் எண்ணெய்வயல் கண்டுபிடிக்கும் வேலையை பிரஞ்சு நிறுவனத்திடமிருந்து நீக்கிக் கொண்டு விட்டது. சோவியத் நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்கு கூட்டணிஅரசு தீர்மானித்த

தும் சம்பந்தமாக இது வரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லையென்றும் அறியப்படுகிறது.

ஆனலும் பிரஞ்சு நிபுணர்கள் சுமார் இரண்டுலட்சம் ரூபா செலவில் நடத்தி

நிலையை அறிக்கையை சோவியத் நிபுணர்களின் பரிசீலனைக்கு விடுவதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானித்திருப்பதாகவும் சோவியத் நிபுணர் குழுவொன்று விரைவில் இங்கு வர விருப்பதாகவும் அறியப்படுகிறது.

# இருவர் பலி, ஒருவர் காயம்

கைதடி, செவ்.

இ. போ. ச. இரட்டைத் தட்டு பஸ்சும் கார் ஒன்றும் மோதியதில் ஒருவர் பலியாளுர். இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் கைதடி நுணுவில் பாலத்தில் இச் சம்பவம் நேற்றிரவு நடைபெற்றது.

காரின் முன் ஆசனத்தில் சாரதிக்குப் பக்கத்திலிருந்தவரே பலியானுர். கார்ச் சாரதியும் காரில்பிரயாணஞ் செய்த மற்ெருருவடும் பலத்த காயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

கட்டைவேலி, வெள்ளி

துன்னலைமேற்கு நுணுவில் பிள்ளையார் கோயில்தொண்டர் சபையின் நிர்வாக சபை கலைக்கப்பட்டதாக ‘ஈழநாடு’ பத்திரிகையில் இம்மாதம் 19-ம் திகதி வெளிவந்த செய்தியில் உண்மையில்லையென்றும் நிர்வாகசபை தனது கடமையை நேர்மையாக செய்துவருகின்றதென்றும் கட்டைவேலி இளைப்பாறிய அலுவலக உதவியாளர் திரு. சி. பெரியதம்பி அறிவிக்கிருர்.

# “இலங்கை சுகாதாரசூழலில் பக்தி நிச்சயம் மலரும்”

யாழ்ப்பாணம், செவ்.

“அரசாங்கம் இலங்கையில் வீதிகளைச் சுத்தமாக வைத்திருப்பதோடு மக்களுக்கு சுகாதார வசதிகளையும் செய்து கொடுத்திருப்பதால் இங்குள்ள வீதிகளும் ஆலயங்களும் சுகாதார அமைப்புடன் விளங்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில் உண்மையில் பக்தி மலரவே செய்யும்.”

இவ்வாறு நேற்றுமுன்தினம் நல்லூர் தேர்த்திருவிழா உற்சவத்தில் கலந்துகொள்ளவந்த திருச்சி அருள்நெறித்திருக் கூட்டத்தைச் சேர்ந்தவரானதிரு. செ. டா கிருஷ்ணன் நமதுநிருபரிடம் தெரிவித்தார்.

கடந்தமாதம் 20-ந்திகதி திருச்சிராப் பள்ளியிலிருந்து ஈழத் தல யாத்திரைகிளம்பிய திருக்கூட்டத்தினர் பாடல் பெற்றஸ்தலங்களைத் தரிசிக்கும் நோக்கமாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்,

பொதுவாக இலங்கைத் தலயாத்திரை பற்றிக்குறிப்பிடுகையில் இந்தியாவைவிட இலங்கைச் சைவமக்களிடையே உண்மையான பக்தியை காணுவதாகத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையர்களின் வழிபாட்டுமுறை பாரம்பரிய பண்பாட்டை அனுசரித்துள்ளதென்றும் இலங்கையின் முக்கியமான தலங்களில் ஆண்கள் மேற்சட்டையின்றி வேட்டியைத் தரித்து அங்கவஸ்திரத்தை அரையில்கட்டி பவ்வியமாக வழிபாடு செய்வது பாராட்டப்படக்கூடியதாக உள்ளதென்றும் தெரிவித்தனர்.

“தரிசனைசெய்யச் சென்ற தலங்களிலெல்லாம் வேண்டிய வசதிகளை அடியார்கள் செய்துதந்தனர். புராண காலத்தைப் போன்று அடியார்களை வணங்குகின்ற பண்பைக் காரைநகரில் கண்டு அதிசயித்தோம். இந்தப் பண்பாடு தற்போது தென்னகத்தைப் பொறுத்தவரை வெகுவாகக் குறைந்துவிட்டது” என அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர் திரு. பா. மூக்கப்பிள்ளை தெரிவித்தார்.

நேற்று முன்தினமிரவு இவ்வடியார் கூட்டத்தினர் ஈழநாடு காரியாலயத்தில் தங்கியிருந்து நேற்று அதிகாலை நயினுதீவுக்குச் சென்றனர். நயினுதீவு யாத்திரையை முடித்துக்கொண்டு இன்றிரவே இந்தியா செல்வதாகத் தெரிவித்தனர்.

உருத்திரபுரம் காந்திநிலையப் பொறுப்பாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை இவர்களின் யாத்திரைக்கு உதவியாக இருந்துவருகிருர்.

# தபாலமைச்சரின் சிங்கள கடிதத்தை கா. பொ. திருப்பினுர்

யாழ்ப்பாணம், செவ்

தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு சிங்களமொழியில் கடிதம் எழுதி ஆங்கில மொழிபெயர்ப்புடன் இம்மாதம் 28-ம் திகதி அனுப்பி வைத்த கடிதம் ஒன்றை திரு. இரத்தினம் அமைச்சருக்கு திருப்பி அனுப்பி வைத்துள்ளார்.

தமிழில் எழுதிய கடிதத்துக்கு தமிழில் பதில் தரும்படியும் சிங்களக் கடிதத்தை தாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திரு. இரத்தினம் அமைச்சரிடம் திருப்பி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை எம். பி. அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் எழுதப்பட்டுள்ளதாவது:

தமிழில் எழுதுங் கடிதத்துக்குத் தமிழில் மறுமொழி பெறும் சட்ட உரிமையைத் தமிழ் அமைச்சராயிருக்கும் நீங்களும் பொருட்படுத்தாமலிருப்பது மிகுந்த கவலைக்குரியது. இந்த உரிமையை நீங்களும் ஏனைய அமைச்சர்களும் மதித்துப் பேணி நடைமுறைப்படுத்துதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இனிமேலாகுதல் எடுக்கப்படுமா என்பதை அறிவிக்குமாறு தமிழ்மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன். உங்கள் மறுமொழியை விரைவில் அனுப்பிஉதவுக நன்றி.

2 கொத்து அரிசி

# அரிசி வைக்கும் இடங்களை தயார் செய்யுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்

கூப்பனுக்கு இம்மாதம் 26-ம்தேதி முதல் 2 கொத்து அரிசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. கடந்த வாரம் முதல் புதிய கூப்பனுக்கு பங்கீட்டரிசி வழங்கப்பட்டுவருகிறது.

கூப்பனுக்கு 2 கொத்து அரிசி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி வட பகுதியிலுள்ள சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளன. யாழ். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி இந்த சுற்றுநிருபத்தை சமாஜ முகாமையாளருக்கு ஊடாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

2 கொத்து அரிசி வழங்குவதற்காக மேலதிகமாக அனுப்பப்படும் அரிசியை வைப்பதற்காக இடவசதிகளை ஒழுங்கு செய்யும்படி இந்தச் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளது. அரிசியின் விலைபற்றி இந்த சுற்றுநிருபத்தில் எதுவும் குறிப்பிடப் படவில்லை. (எழு. நிரு.)

# “எல்லோரும் இலங்கையர் என்ற நினைவு வேண்டும்”

— அமைச்சர் குமாரசூரியர்

கொழும்பு, திங்கள்

“இலங்கையில் வாழும் இனங்கள் தமது தனித்துவத்தை பேணும் அதே நேரம் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வாழ எல்லோரும் இலங்கை மக்கள் என்ற எண்ணத்துடன் நாட்டை நேசிக்கவேண்டும்”

இவ்வாறு தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் ‘ஈழநாடு’ நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினுர்.

“பல பிரச்னைகளுக்கு அடிப்படையாக விளங்கும் பொருளாதாரப்பிரச்னையைச் சீர்படுத்தினுல் நாட்டிலே ஒற்றுமை வளரும், சுபிட்சம் கொழிக்கும், கலைகள் மேலோங்கி வளரும்.

“இலங்கையில் மூன்று பிரதான இனங்கள் வாழ்கின்றன. இவ்வினங்கள் நாம் இலங்கையர் என எண்ணுவது எந்த வகையிலும் ஓர் இனத்திற்கோ அல்லது மொழிக்கோ பாதகம் ஏற்படுத்தாது. ஒவ்வொரு இனமும் தத்தமது மொழி, கலாச்சாரக் தனித்துவத்தைப் பணும் அதே நேரம் தேசிய ரீதியில் சிந்தித்து செயலாற்றினுல் இனங்களிடையே ஒற்றுமையும் தேசிய அபிவிருத்தியும் ஏற்படவும் மனக்குரோதங்கள் நீங்கவும் இனவாதம் ஒழியவும் வழி பிறக்கும்” என குமாரசூரியர் சொன்னுர்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

**நிபந்தனையின்றி உரிமை**

“ஐக்கியமுன்னணி அரசாங்கம் சிறுபான்மை மக்களின் உரிமையை வழங்க எவ்வித நிபந்தனையும் விதிக்கமாட்டாது. தமிழ்மக்கள் தமது உரிமையைப் பெற விசேஷ கடமை எதையும் அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. தமிழ் மக்கள் தாம் இலங்கை மக்கள் என்று எண்ணுவதுடன் தேசிய ரீதியில் சிந்திக்க வேண்டும்.



**மொழித்துவேஷம் வேண்டாம்**

எமது மொழி வளர்ச்சிக்கு இன்னோர் மொழி மீது துவேஷம் பாராட்டுவது தவறு. ஒருவன் தனது தாய்மொழி மீது பற்றுக் கொள்வது அவசியமானது. தனது தாய்மொழிப் பற்றை உறுதி செய்ய இன்னோர் மொழி மீது துவேஷத்தை வளர்க்கவேண்டும் என்பதில்லை

**கலைகளின் வளர்ச்சி**

கலைகளின் வளர்ச்சிக்கு பொருளாதார வளர்ச்சி அவசியம். பொருளாதார வளர்ச்சி உள்நாட்டிலே மக்களிடையே ஒற்றுமையையும், சாந்தியையும் ஏற்படுத்தும் பட்சத்தில் கலைகளின் வளர்ச்சி உயர்நிலை பெறும்.

கலைஞன் பொதுவானவன் தமிழன், சிங்களவன் எனப் பேதம் பாராட்டக்கூடாது. ஒற்றுமையும் அமைதியும் கலைகளின் தனித்துவத்தைப் பேணவும் வளர்க்கவும் கூடியது கலைவளர்ச்சிக்கு அரசாங்கம் சகல உதவிகளையும் செய்யும். ஈழத்தில் தமிழ் சினிமா வளர்ச்சி அடையச்செய்ய அதற்கான வழிகளை மக்களும் கலைஞர்களும் மேற்கொள்ளவேண்டும்”

# கடத்தலைக் கண்டுபிடிக்க ‘உளவறியும் மின்பொறி’

கோட்டை, திங்கள்

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடத்தல்தொழிலில் ஈடுபடும் பிரயாணிகளைக் கண்டுபிடிப்பதற்கு விரைவில் உளவறியும் மின்ஞெளி உபயோகிக்கப்படவிருக்கிறது.

இந்தப் புதிய சாதனம் விமானநிலையத்தின் நுழைவாசலில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் வெளியில் செல்லும் பிரயாணிகளையும் உள்ளுக்கு வரும் பிரயாணிகளையும் இரகசியமாகக் கவனித்துக் கடத்தலில்ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்துவிடும்.

அரசாங்கம் இந்த அதிசய கருவியை வெளிநாட்டிலிருந்து பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கடத்தல்களைக் கண்டுபிடிப்பதற்கு சமீப காலத்தில் உலகின் சகல விமான நிலையங்களிலும் இந்த யந்திரசாதனம் பயன்படுத்தப்பட்டுவருகிறது. கட்டுநாயக்கா விமானநிலையத்தில் மேற்படிசாதனத்தின் சிறிய அளவினதான கருவி பரீட்சார்த்தமாக உபயோகிக்கப்பட்டது.

பெருந்தொகையாக இரத்தினக்கற்களைக் கடத்திச் சென்று நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்கம் விளைவிப்பவர்களை இச்சாதன

# இத்தாலி மக்களுக்கு பால் உணர்ச்சி அதிகமாம்

## இந்திய பெண்மணி கூறுகிருர்

ரோம்: ஆகஸ், 31

இத்தாலியில் மனேவியாதியால் பீடிக்கப்படுபவர்களை சங்கிலியால் கட்டிவைக்கும் பழக்கம் இருந்து வருவதாகவும் அங்குள்ளவர்கள் அதிக பால்உணர்ச்சி உள்ளவர்களாயிருப்பதாகவும் இத்தாலியில் இயங்கிவரும் உலகமனேவியாதி ஸ்தாபனத்தில் கடமையாற்றிய இரு இந்தியப் பெண்கள் தெரிவித்துள்ளனர். இவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை இந்திய பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

கேரளத்தைச் சேர்ந்த செல்வி அன்ன கென்னக்கட்ட என்ற பெண்மணி பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் வெளிநாடுகளுக்குச் சென்ற சமயங்களில் தான் எப்பொழுதும் கன்னியாஸ்திரியாக இருக்கவில்லை என்று கூறியுள்ளார்.

இத்தாலி சம்பந்தமாக இவர்கள் வெளியிட்ட கருத்துக்களை ரோமன் கத்தோலிக்க குருவானவர் ஒருவர் மறுத்துள்ளார். மனேவியாதியால் பீடிக்கப்படுபவர்களை சங்கிலியால் கட்டி வைத்து சிகிச்சை அளிக்கும் முறையை அகற்றும் திட்டத்தின்கீழ்ஸ்தாபிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட ஸ்தாபனத்தில் அவ்விதம் இப்போது நடைபெறுவதில்லையென அவர் மறுத்துக் கூறியுள்ளார்.

மூலம் பிடித்துவிடலாம் என சுங்கப்பகுதியின்பிரதம அதிகாரியன திரு. வி. பி. வித்தாச்சி இந்த உளவு சாதனம் பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பசார் ரேட்டில் கட்டிடத்தில் கூரை மரங்கள், பீலி, தட்டை ஓடுகள், சிற்றுகளும் மின்சார உபகரணங்களும், சோகேஸ், அலுமாரி, ஒவ்விஸ் மேசை, கதிரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், திரு. இன்சினியரிங் கோப்பறேற், 9/1, மொம்சாக் கட்டிடம், ஸ்டான்லிவீதி. யாழ்ப்பாணம். 2912

வேலணை கிழக்கில் அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் மண்கும்பான் வேலணை வீதியில் உள்ள ''மண்சிவந்தான்'' என்னும் பனங்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்றது. லான்ட் இன்வெஸ்ற்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 2903

### தேவை

பிணைப்பணம் கட்டக்கூடிய இரண்டு விற்பனை ஆண் பிரதிநிதிகளும் பிணைப்பணம் கட்டக்கூடிய ஒரு கஷியரும் உடனே தேவை. நேரில் வரவும். அல்லது விண்ணப்பிக்கவும்: மனேஜர் ஆர். டி. என். ஸ்ரோஸ் அன் சேல்ஸ் ஏஜன்சி, மேல் மாடி, நம்: 3/1 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2191

### திருமண அழைப்பு

ஜெயரத்தினம் — கமலேஸ்வரி

எமது புத்திரி செல்வி கமலேஸ்வரிக்கும், கந்தர்மடம் முருகேசு தம்பதிகளின் புத்திரன் செல்வன் ஜெயரத்தினத்திற்கும் (முகமதலி அப்துல்அலி யாழ்ப்பாணம்) ஆவணி 18-ம் நாள் (3-9-70) வியாழக்கிழமை இரவு 10-38 மணி தொடக்கம் 11 மணி வரை மணமகள் இல்லத்தில் நடைபெறும் வைபவத்தில் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் சி. சிவகுரு கொக்குவில். 2909

### விற்பனைக்கு

தெல்லிப்பளைச் சந்திக்கு அணித்தாய் காங்கேசன்துறை பிரதான வீதியில் 1 1/2 லாச்சம் நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். தாமோதர வில்லா, தெல்லிப்பளை. 2913

### வெலிசினிமா

மாவிட்டபுரம்

தினசரி: 6-30, 9-30

போயா, பிரிப்போயா 2-30

முத்துராமன் - புஷ்பலதா நடித்த

**சுபதினம்**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த

**இரு கோடுகள்**

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு)

**வெலிங்டன்** யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)




### சுன்னாகம் பட்டணசபை

## கேள்வி பற்றிய அறிவித்தல்

(1) 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் திகதி காலை 10-00 மணிக்கு முன் சீல் வைத்த உறைகளில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விகள் பிரதியுடன் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) கீழ்க்காணும் விகிதப்படி வைப்புப்பணமும், பத்திரப்பணமும் கட்டியபின் கேள்விப்பத்திரங்கள் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் திகதி பி. ப. 2-00 மணிவரை தலைவரால் வழங்கப்படும்.

(3) சகலவிபரங்களும் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விபரம் | வைப்புப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. அம்பலவாணர் வீதி திருத்த வேலை (பகுதி 1) | 50-00 | 10-00 |
| 2. அம்பலவாணர் வீதிக்கு 2-வது தடவை தார் ஊற்றுதல் (பகுதி 11) | 15-00 | 3-00 |
| 3. 6-ம்வட்டார களவியவத்தை ஒழுங்கை திருத்தவேலை | 35-00 | 5-00 |
| 4. 3-ம் வட்டார இலகன் தோட்டம் ஒழுங்கை திருத்தவேலை | 35-00 | 5-00 |

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை, சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம். 28-8-70. 2430

### யாழ். மாநகரசபை

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு யாழ். மாநகரசபையில் கட்டிட ஒப்பந்தகாரராகப் பதிவு செய்துள்ளவர்களிடமிருந்து 13-9-70 நண்பகல் 12-00 மணி வரை கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. செங்குந்தா சந்தையில் ஒரு திறந்த கொட்டகை அமைத்தல்.

2. சின்னக்கடை மீன் சந்தை நீட்டிக் கட்டுதல்.

கேள்விக்காரர் அனைவரும் கேள்விகள் திறக்கப்படும் 13-9-70 பி. ப. 3-30 மணிக்கு எனது அலுவலகத்தில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ். மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடம் 10-9-70 நண்பகல் 12-00 மணி வரை ரூபா 25/- ஒவ்வொரு வேலைக்கும் கேள்வி வைப்புப் பணமாகவும் ரூபா 5/- ஒவ்வொரு வேலைக்கும் படிவப் பெறுமதியாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும். எல்லாக் கேள்விகளும்

## 'கரம்' சாம்பியன்

யாழ்ப்பாணம், செவ். பரந்தன் ரசாயன விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விழாவையொட்டி நடாத்தப்பட்டு வரும் 'கரம்' சுற்றுப் போட்டியில் யோகராசா மீண்டும் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யோகராசாவுக்கும், பென்னடிற்றுக்குமிடையில் நடைபெற்ற 'ஒற்றையர் கரம்' போட்டியின் இறுதியாட்டத்தில் யோகராசா 2—1 ஆட்டத்தினால் வெற்றி பெற்றார்.

திரு. யோகராசா கடந்த பல வருடங்களாக, மேற்படி கழகத்தில் 'கரம்' சாம்பியனாயிருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (தே. நி)


MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Pre-Poya, Poya 4 Shows
George Milton
in
[illegible]OKER WITH PISTOLS
(Scope-color)

REGAL JAFFNA
Daily 4 Shows


# “உயர்ந்த சிந்தனை மூலம் நல்ல சமுதாயத்தை ஆக்குவோம்”

## நெடுந்தீவு வள்ளுவர் விழாவில் பண்டிதர் கா. பொ.

நெடுந்தீவு, திங்கள் ''எமது சிந்தனைகளையும் செயல்களையும் நல்லவழிகளில் ஈடுபடச் செய்யவேண்டும். இப்படிச் செய்வதினால் நாம் நல்ல சமுதாயத்தை ஏற்படுத்த இலகுவாய் இருக்கும். இதனைத்தான் திருக்குறள் போதிக்கின்றது' என நெடுந்தீவுமேற்கு நெழுவினிப் பிள்ளையார் கோவில் வீதியில் பராதி அரங்கில் நடைபெற்ற வள்ளுவர்விழாவைத் தொடக்கிவைத்துப் பேசிய தீவுப்பகுதி எம் பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

தொடர்ந்து எம் பி. பேசும்போது கூறியதாவது:-

மனைவியானவள் கணவனின் குறிப்பறிந்து தன்வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்யப்பழகிக் கொள்ள வேண்டும். வருவாய்க்கு மிஞ்சிச் செலவு செய்யும் இல்லத்தாள் குடும்பத்திற்கு தகுந்தவள் அல்ல. இதனைத்திருக்குறள் நன்றாக விளக்குகிறது.

''தமிழ்பேசும் மக்களாகிய நாம் அடிமை வாழ்க்கையை விரும்பும் நிலையை மாற்றவேண்டும் வேற்றுமையைமறந்து ஒற்றுமையாக வாழ நாம் நம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

விழாவின் ஓர் அம்சமான கருத்தரங்கு சமாதான நீதவான் திரு. சு. நாகேந்திரர் தலைமையில் நடைபெற்றது, திரு. ஐ சச்சிதானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினர். கருத்தரங்கில் உரையாற்றிய 'புதுமைலோலன்' பேசுகையில் பாரதி, கம்பன், பாரதிதாசன் போன்றவர்கள் தந்த தமிழ் இலக்கியங்களுக்கு வள்ளுவர் தந்த திருக்குறள் இலக்கணமாக அமைகிறதென்றும், இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர்தந்த 1330 குறள் மணிகளில் அறம், பொருள், இன்பத்தை எக்காலத்துக்கும் பொருத்தமாக அமையக் கூடியவகையில் இருக்கும் மகிமையை அறிந்த பிறநாட்டவர்கள் அதனைப்பல மொழிகளில் பெயர்த்துள்ளார்கள் என்றார்: அரசியல்வாதிகளுக்கோ பொதுமக்களுக்கோ ஏற்படும் தீர்க்கமுடியத பிரச்னைகளுக்கும் கேள்விகளுக்கும் திருக்குறள் மட்டுமே விடைகொடுக்குமெனஅவர் சொன்னார்.

## பெண்ணின் பெருமை பற்றி பண்டிதை தங்கம்மா

அடுத்துபண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வள்ளுவர் காட்டிய பெண்மை என்னும்பொருள்பற்றிஉரை நிகழ்த்துகையில் கூறியதாவது:- வள்ளுவர் கற்பைப் பற்றி மிக அழகாகப்பாடியுள்ளார்' ஒருபெண், தெய்வத்தைத் தொழாவிட்டாலும் அதிகாலையில் கணவனுக்கு முன் எழுந்து அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்பவளின் கற்பு மாண்புமிக்கது. பெண்குலம் உயர் நிலையை அடைந்து விட்டால் தெய்வத்தன்மைஉண்டாகிறது. தன் கணவன்தீய வழிகளில் ஈடுபடுகிறான் என்று தெரிந்தும் அவனைக் கண்டதும் அவனிடமுள்ள குறைகளைமறந்து புன்முறுவலோடு பணிவிடைசெய்யும் பெண்ணின் குணத்தை வள்ளுவர் நன்கு போற்றிவிளக்கியுள்ளார்.

''வறுமையிலும் கணவனை நேசிக்கும் பெண்ணேசிறந்த மனையாள். பணக்காரப் பெற்றாரின் வீட்டிலிருந்து வரும் ருசியான உணவைத் திருப்பி அனுப்பி விட்டுத் தன் கணவனின் சிறுஉழைப்பிலேயே உண்ண ஆசைப்படும் மனையாளின் குணம் தான் சிறந்தது. இவற்றிற்கு மண்டோதரி, கண்ணகி' சுசீலை போன்றவர்கள்நல்ல எடுத்துக் காட்டுகள்' இலக்கியங்களுக்கு இலக்கணம் திருக்குறள் என்றும், தமிழரின் செல்வத்துள்

பசுவூர் சு. மகாலிங்கசிவம், மாவுறையூர் செ. மகேந்திரன், கலியுகன் கந்தசாமி, முத்துசிவன் சிவலிங்கம் ஆகியோர் கவியரங்கில் கலந்து கொண்டனர்.

அடுத்துநடந்த இசையரங்கில் சங்கீத பூஷணம் திரு. வே. சுந்தரலிங்கம், மெல்லிசை வல்லுனர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இசைவிருந்தளித்தனர். திரு மு. குணசிங்கம் தலைமை வகித்தார்.

திரு. ஆ. வைத்தியநாதர் தலைமையில் நடைபெற்ற இசையரங்கில் யாழ். கலாக்ஷேத்திர மாணவிகள் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் அளித்தனர். திரு. ஜே. கொன்ஸ்டன்டைன் தலைமையில் நாடக அரங்கு இடம் பெற்றது. 'நல்லதீர்ப்பு' 'கண்ணகி' ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. திரு. சு. சிவநாயகமூர்த்தி நன்றிதெரிவித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 1—9—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பி[illegible]தின வாழ்த்துக்கள். 5-30 வளரும்பயிர். [illegible]-00 இசைப்பயிற்சி, [illegible] சமுகமறுமலர்ச்சி, 7-00 வாத்திய இசை, 7-15 [illegible] 7-45 செய்திச்சுருள்

## 'ஒத்துழைப்பு அவசியம்'

உடுப்பிட்டி, ஞாயிறு 'அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்குவதற்கு முன்னர் பாடசாலைகள் முகாமைக்காரர்களின் பொறுப்பிலேயே இயங்கி வந்தன. அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றபின்னர் கல்லூரிகளின் வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்து வருவன பெற்றார். ஆசிரியர் சங்கங்கள்தான். ஆதலால் பெற்றோர்கள் தான் பாடசாலைகளின் முகாமைக்காரர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. கல்லூரி வளர்ச்சிக்குப் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம்.'

இவ்வாறு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு வே. சோமசுந்தரம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிப் பெற்றார்- ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

திருவாளர்கள வே. கந்தையா, ஆ. கனகசபை. ச வெற்றிவேலு ஆகியோடும் பேசினர்.

பெற்றார்- ஆசிரியர் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- அதிபர்திரு. வே சோமசுந்தரம், உபதலைவர்கள்- திரு. வே. கந்தையா, திரு. வீ. கனகசபை, காரியதரிசி- திரு. என் எஸ். சின்னத்தம்பி ஆசிரியர், தனாதிகாரி- திரு. ச. வெற்றிவேலு.

ஏழுபேர் அடங்கிய நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## “நல்ல சமூக அமைப்புக்கு விளையாட்டு உதவும்”

நெடுந்தீவு, திங்கள் ''விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படும் வெற்றி தோல்விகள் மாணவரின் பிற்கால வாழ்வில் ஏற்படக்கூடிய பெரும் பிரச்னைகளைச் சாதுரியமாகத் தீர்க்கும்பண்பினை ஏற்படுத்தும் விளையாட்டுத்துறை ஒருநல்ல சமூ

விளையாட்டுக்கழகம், ச அமரசிங்கம் ஸ்ரார் விளையாட்டுக்கழகம், இ நவரத்தினம் ஸ்ரார் வி க

நீளம் பாய்தல்- க வரதராசா சிவசக்தி வி க, சு யேசுராசா ஜோன்சன் வி க, இ யாக்கோப்பு உதயசுடர் வி க,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன் — சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்



சர்வதேச திரைப்பட அரங்கில் பாராட்டுப்பெற்ற படம், தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

## யாழ்-வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் ★ ஜெய்சங்கர்
நாகேஷ் ★ எம். ஆர். ஆர். வாசு
ராஜஸ்ரீ ★ வெண்ணிற ஆடை நிர்மலா
குமாரி சச்சு ★ மனோரமா ★ வரலட்சுமி
நடித்த

# பூவா தலையா

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
கே. பாலச்சந்தர்
பாடல்கள் வாலி — இசையமைப்பு எம்.எஸ்.விஸ்வநாதன்


விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எல்லாக் கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டு இணைப்பிரதிகளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் என்ன வேலைக்கென்று எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

மேல் விபரங்களை மராமத்துப்பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25-8-70. 2429


ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 10-30, 4-45 7, 9-45
Graig Stevens
in
GUNN



...OKER WITH PISTOLS
(Scope-color)

REGAL JAFFNA
Daily 4 Shows
Jim Brown
in
THE SPLIT


மாலை 4-25 ... ஒலிபரப்பு, 5-00 பி... தின வாழ்த்துக்கள். 5-30 வளரும்பயிர்.


இரவு 6-00 இசைப்பயிற்சி, 6-30 சமூகமறுமலர்ச்சி, 7-00 வாத்திய இசை, 7-15 பாட்டு, 7-45 செய்தி...ருள், 8-00 முஸ்லிம் நி...ழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.


## இன்றுமுதல் குதூகல ஆரம்பம்!

## ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி பி. ப. 2-30, 6-30, இரவு 9-45 மணிக்கு போயா தினங்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 10-30க்கு மெட்னி காண்பிக்கப்படும்.

சாரதா, செம்மீன் ஷீலா, மது,
பிரேம்நசீர், திக்குரிச்சி
மற்றும் பலர் நடித்த
சுப்பிரியா பிக்சர்ஸ்



விஜயா: பணத்திமிர் என் வாழ்க்கையை சூறையாடியது. பெற்றெடுத்தேன் மூன்று செல்வங்களை, கட்டிய கணவனோ பாதிவழியில் பறந்துசென்ருன். வாழ வழிதெரியாமல் திணறினேன்! பதறினேன்! ஆதரிப்பார் யாருமில்லை! இரக்கப்படுபவர் எவருமில்லை. தெருத்தெருவாக அலைந்தேன்! வீடுவீடாக கை ஏந்தினேன், பிச்சைகேட்டு! உணவில் கலந்தேன் விஷத்தை! ஊட்டினேன் குழந்தைகளுக்கு.........

மிகுதி வெள்ளித்திரை விடையளிக்கும்

# துலாபாரம்

(மலையாளம்)
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்


தான் சிறந்தது. இவற்றிற்கு மண்டோதரி, கண்ணகி, சுசீலை போன்றவர்கள் நல்ல எடுத்துக் காட்டுகள்' இலக்கியங்களுக்கு இலக்கணம் திருக்குறள் என்றும், தமிழரின் செல்வத்துள் செல்வம் திருக்குறள் என்றும், வள்ளுவருக்குவிழா எடுப்பதிலும்பார்க்க வள்ளுவர் தந்த திருக்குறளுக்கிணங்க நாம் வாழ்வதே சிறந்தது''.

திரு சி. நாகேந்திரன். மயிலை சிவ. சண்முகதாசன், பண்டிதர் க. த. ஞானப்பிரகாசம், பண்டிதர் ஆ. சுப்பிரமணியம், திரு. இராசின்னத்தம்பி, வித்துவான். சைவப்புலவர் க கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்கள்.

கருத்தரங்கைத்தொடர்ந்து கவியரங்கு நடைபெற்றது. நெடுந்தீவுக் கிராமசபைத் தலைவர் திரு. அ. த. அம்பலம் கவியரங்கைத் தொடக்கி வைத்தார். கவிஞர்கள் இ. நாகராஜன், வி. கந்தவனம், காரை செ. சுந்தரம்பிள்ளை,

களில் ஏற்படும் வெற்றி தோல்விகள் மாணவரின் பிற்கால வாழ்வில் ஏற்படக்கூடிய பெரும் பிரச்னைகளைச் சாதுரியமாகத் தீர்க்கும்பண்பினை ஏற்படுத்தும் விளையாட்டுத்துறை ஒருநல்ல சமூகத்தை ஆக்கித்தரவல்லது. எனவே விளையாட்டினுல் வரும் பயன்களைப் பெறுவதற்குத் தவறிவிடக்கூடாது''

இவ்வாறு நெடுந்தீவு விளையாட்டுக் கழகங்களிடையே நெடுந்தீவில் நடைபெற்ற விளையாட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நெடுந்தீவு விளையாட்டுத் துறை அதிகாரி திரு. நா. சு. முருகேசு கூறினுர்.

நெடுந்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சுவந்தா குணவர்த்தன வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் பத்திரங்களும் வழங்கினுர்.

வெற்றி பெற்ற வீரர்களின் விபரம்:

100 மீட்டர் ஓட்டம்
க அரசரட்ணம் சிவசக்தி

யாட்டுக்கழகம், இ நவரத்தினம் ஸ்ரார் வி க

நீளம் பாய்தல்- க வரதராசா சிவசக்தி வி க, சு யேசுராசா ஜோன்சன் வி க, இ யாக்கோப்பு உதயசுடர் வி க,

200 மீட்டர் ஓட்டம்
க அரசரட்ணம் சிவசக்தி வி க, ச அமரசிங்கம் ஸ்ரார் வி க, க வரதராசா சிவசக்தி வி க

800 மீட்டர்
சு மகாதேவா சிவசக்தி வி க, சோ கோணேஸ்வரம் பிள்ளை ஸ்ரார் வி க, இ பரமநாதன் ஸ்ரார் வி க

குண்டெறிதல்- இ. யாக்கோப்பு, உதயசுடர் வி க, க. தர்மநாயகம் ஸ்ரார் வி. க., அ. எமிலியானுஸ் பிள்ளை உதயசுடர் வி. க,

400 மீட்டர்- இ. யாக்கோப்பு உதயசுடர் வி. க, ச அமரசிங்கம் ஸ்ரார் வி. க, செ, நீக்கிலாபிள்ளை உதயசுடர் வி, க,

1500 மீட்டர்- சு. மகாதேவா சிவசக்தி வி. க,, அ. பிலிப்பு உதயசுடர் வி. க, சோ கோணேஸ்வரம்பிள்ளை ஸ்ரார் வி க,

தத்திமிதித்துப் பாய்தல்- க. அரசரட்ணம் சிவசக்தி வி க, வே. ஆலாலசுந்தரம் சிவசக்தி வி க, பே, அருளப்பு உதயசுடர் வி. க

4X100 மீட்டர் அஞ்சல் ஓட்டம்- ஸ்டார் வி க, உதயசுடர் வி க, சிவசக்தி வி க,

4X400 மீட்டர் அஞ்சல்- ஸ்டார் வி க, உதயசுடர் வி க, ஜோன்சன் வி க.

விநோத உடைப்போட்டி- நா அரியரத்தினம், க பெர்ணுட்சோ, சு சுந்தரலிங்கம்

---

# யாழ். கிரிக்கெட் சங்கம் புத்துயிர் பெறுகிறது

யாழ்ப்பாணம், செவ்.

கடந்த பல வருடங்களாகச் செயல்படாமலிருந்து வந்த 'யாழ்ப்பாண கிரிக்கெட் விளையாட்டுச் சங்கம்' மீண்டும் செயல்படவிருக்கிறது.

1955-ம் ஆண்டின் பின் மேற்படி சங்கம், யாழ்ப்பாணத்தின் கிரிக்கெட் வீரர்களிடையே எதுவித சுற்றுப் போட்டிகளையோ அல்லது வெளியிடத்துப் போட்டிகளில் பங்குபற்றச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காது விட்டிருந்தது. இதனுல் கடந்த காலங்களில், யாழ்ப்பாணத்தின் கல்லூரிகளிடையே சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உதயமாகிய போதிலும் அவர்களின் பாடசாலைக் காலம் முடிவடைந்ததும், அதனுடன் அவ்வீரர்களின் கிரிக்கெட் ஆட்டமும் மறைவதாயிருந்தது.

பாடசாலையை விட்டு வெளியேறிய வீரர்களை ஊக்குவித்து அவர்களின் கிரிக்கெட் ஆட்டத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு மேற்படி சங்கம் கடந்த காலங்களில் செயல் படாமல் இருந்தமையினுல் யாழ்ப்பாணத்தின் கிரிக்கெட் தரம் குன்றிவிட்டதாக தற்போது இச்சங்கத்தை மீண்டும் நடாத்துவதற்கு முன்வந்திருக்கும் திரு. கே. எஸ் சி. சேவியரும், திரு. ஈ. பத்மநாதனும் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

சங்கப்புனரமைப்பு சம்பந்தமாக இவ்வாரம் கூடித் தீர்மானிக்குமுகமாக யாழ். மாவட்டத்திலுள்ள எல்லா விளையாட்டுக் கழகங்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (தே. நி)

---

பருத்தித்துறை, திங்கள்

அடிக்கடி ஏற்படும் மின்சாரக் கோளாறு காரணமாக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் கடந்த வாரம் பல் சிகிச்சை நிலையத்தில் ஏராளமான நோயாளிகள் வழக்கத்திற்கு மாருக பலமணிநேரம் சிகிச்சைக்கு காத்திருக்கவேண்டி ஏற்பட்டது.


உத்தரவாதமுள்ள தங்க - வைர
நகைகளை பெற்றுக்கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்

## எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்

நகைகள் — வைர வியாபாரிகள்
கன்னாதிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்துக்குஎதிராக நடவடிக்கை எடுப்பதில்

# இஸ்ரேல் மந்திரிசபையில் பிளவு!

## சமரசம் ஏற்படுத்துவதில் பிரதர் மெயர் தீவிரம்

டெல் அவிவ், ஆகஸ்ட் 13

இஸ்ரேல் மந்திரிசபையில் பிளவு ஏற்பட்டுள்ளது சூயஸ்கால்வாய்ப் பிரதேசத்தில் எகிப்திய போர் நிறுத்தத்தை மீறியிருப்பதாகக் கூறப்படுவது சம்பந்தமாக எதிர்நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி எழுந்த கருத்துமோதல் காரணமாகவே இந்த பிளவு ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திரு. மோஸி தயானும் பிரதம மந்திரியும் பல விஷயங்களில் இணங்கிப்போனாலும் கூட இவர்கள் இருவரின் கொள்கைகளுக்கும் எதிராக மந்திரிசபையினர் வாக்களித்துள்ளனர். போர்நிறுத்த மீறல்கள் குறித்து தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று தயான் கருதுவதாகவும், இந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக சமரசக் கருத்தை உருவாக்க பிரதம மந்திரி திருமதி கோல்டா மெயர் முயற்சி செய்வதாகக் கருதப்படுகின்றது.

இதற்கிடையில் ஐ நா. விசேஷப் பிரதிநிதியுடன் பேச்சு நடாத்துவதற்காக இஸ்ரேல் பிரதிநிதி திரு. தக்கோவா இப்போதைக்கு நியூயோர்க் புறப்படமாட்டார் என்று தெரிகின்றது. இஸ்ரேல் மந்திரிசபையிடமிருந்து கட்டளை பெற்ற பின்பே அவர் நியூயோர்க் புறப்படவிருக்கிறார்.

எகிப்தியர் பெரிய அளவில் போர்நிறுத்த மீறல்களை செய்திருப்பதாக இஸ்ரேல் மீண்டும் ஐ.நா. விடம்புகார் செய்திருக்கின்றது.

### அம்மானில் அமைதி

ஜோர்டான் தலைநகரான அம்மானில் அரசுப் படைகளுக்கும் அரபுக்கொரில்லாக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் இப்பொழுது நின்றுள்ளது. ராணுவ முகாம் ஒன்றின்மீது இனந்தெரியாத யாரோ துப்பாக்கிப்பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து இந்த மோதல் ஏற்பட்டது. அரசாங்கஅதிகாரிகளும், கொரில்லாக்களின் பிரதிநிதிகளும் இன்று கூடி பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறார்கள்.

### நாஸர் மறுப்பு

சூயஸ்கால்வாய் பகுதியில் எகிப்தியர் ஏவாயுதத்தளங்களை நிறுவி வருவதாக இஸ்ரேலியர் கூறிவருவதை ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் மறுத்திடுக்கிறார்.

## மதியழகனுக்கு தேஷ் முக்கின் பாராட்டு

சென்னை, ஆக. 31

தமிழக நிதியமைச்சர் மதியழகன் மனச்சாட்சி நிறைந்தவர், தலைசிறந்த நிதியமைச்சர் இதைநாடும் அறியும் நானும் அறிவேன் இவ்வாறு பழைய மத்திய அரசு மந்திரி திரு. தேஷ்முக் மதியழகனை பாராட்டியிருக்கிறார்.

உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் பொன்விழாவின்போது நிதி அமைச்சர் மதியழகன் மலர் ஒன்றை வெளியிட்டு வைத்தார்.

33 நாடுகளைச் சேர்ந்த துணைவேந்தர்கள் இந்த விழாவில்கலந்து கொண்டனர்.

......

## தபால்விநியோகம் இல்லாத ஊர்!

ஏருவூர், திங்கள்

ஏருவூர்பகுதியிலுள்ள மீராகேணி என்னும் கிராமத்தில் தபால் விநியோகம் நடைபெறுவதில்லை. இதனால் இப்பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். தபால் விநியோகத்திற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இப்பகுதி இளைஞர் கழகத்தினர் தபாலமைச்சரிடம் கோரியுள்ளனர்.



## புதிய வழக்கறிஞர்!

திரு. விமல் சொக்கநாதன் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக சமீபத்தில் நீதியரசர் திரு. வின்சென்ற் தாமோதரம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சிறந்த நடிகரும், எழுத்தாளரும் ஒலிபரப்பாளருமான திரு. விமல் சொக்கநாதன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தில் கடமையாற்றிய கடந்த ஆறு ஆண்டு காலத்தில், கண்டதும் கேட்டதும் செய்திச்சுருள் தொழிலாளர்வேளை ஒலிவண்ணம் உட்பட பல்வேறு விதமான நிழ்ச்சிகளையும் தயாரித்தளித்திருக்கிறார். வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் சினிமா நட்சத்திரங்கள், பிரமுகர்கள் முதலானோரையும் பேட்டி கண்டு ஒலிபரப்பியிருக்கிறார்.

சுமார் 25 மேடைநாடகங்களில் பங்குபற்றியுள்ள இவர் தயாரித்தளித்த 'வெனிஸ் வணிகன்' தமிழ் நாடகம், பிரிட்டிஷ் கவுன்சிலார் கொழும்பில் நடாத்திய சர்வதேச நாடகவிழாவில் பங்குபற்றி பெரும் பாராட்டைப் பெற்றது அந்நாடகத்தில் இவரே 'சைலக்'காகவும் தோன்றிநடித்தார். சட்டக்கல்லூரியில் பயிலும் காலத்தில், தமிழ்மன்றச் செயலாளராகவும், இந்து ச[illegible]யின் இதழாசிரியராக வு[illegible] பணியாற்றினர். 'சைவ நீதி' என்ற வருடாந்த சஞ்சிகையையும் ஆரம்பித்து வெளியி[illegible].

தற்சமயம் இவர் [illegible] நூல்களை தமிழில்படைக்கும் [illegible]

## படித்துப்பட்டம்பெற முடியவில்லையே!

### எம். ஜி. ஆர். வருத்தம்

சென்னை, ஆக. 31

''நான் படித்துப் பட்டம் வாங்கவேண்டுமென்று எண்ணினேன். ஆனால் அது முடியாமற்போய்விட்டது. என்னாலும் படித்துப் பட்டம் வாங்கமுடியாமல் போய்விட்டதே என்ற ஏக்கம் என் மனதில் எப்பொழுதும் இருந்துகொண்டே வருகிறது.''

இவ்வாறு எம். ஜி. ஆர். கூறினார்.

ஆலந்தூரில் ஆரம்பப் பள்ளித் தொடக்க விழாவொன்றில் உரை நிகழ்த்தியபோது இவ்வாறு எம். ஜி. ஆர். கவலைப்பட்டார்.

ஏழு வயதில் 3ம் வகுப்போடு நாடக நடிகனாக மாறினேன். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் வந்தேன். இன்று இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறேன் என்பதைச் சிந்தித்துப் பார்த்து இங்குள்ள சிறுவர்கள் என்னைப் போல நடிகனாக வராவிட்டாலும், சிறந்த டாக்டர்களாகவும், எஞ்சினியர்களாகவும் எதிர்காலத்தில் உயரவேண்டுமென்று உறுதியுடன் உழைக்கவேண்டும். குடும்பத்துக்குப் பாரமாக இல்லாமல் நாட்டுக்குத் தொண்டாற்றவேண்டுமென்று எம். ஜி. ஆர். கூறினார்.

மாணவர்கள் தினமும் காலையில் உடற்பயிற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்ட அவர், அந்தப் பாடசாலைக்கு உடற்பயிற்சி கருவிகள் வாங்கித் தருவதாகவும் உறுதியளித்தார்.

## சிங்கப்பூர் அரசாங்க மொழி இரண்டாகக் குறைக்கப்படும்

கொழும்பு, திங்கள்

சிங்கப்பூரில் தற்போது முகிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 4 மொழிகள் எதிர்காலத்தில் இருமொழிகளாக்கப்படும் என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சிங்கப்பூர் பிரதம மந்திரி திரு. லிகுவான்யூ இன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசும்போது கூறினார்.

ஆசிய பாதுகாப்பு எந்த விதத்தில் அமையவேண்டுமென்று விடுக்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் போது, அமைச்சர் ஒப்பந்தங்கள் மூலமும், ஒப்பந்தங்கள் அற்றமுறையிலும் பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்ளலாமென்று தெரிவித்தார்.

சிங்கப்பூர் முன்னேற்றத்துக்கு கடும் உழைப்புமட்டுமல்லாமல் அதிர்ஷ்டம்துணைபுரிந்துள்ளதென்றும் அவர் கூறினார்.

## 'அக்ரோ' உற்பத்தி ஆலை: அமைச்சர் திறந்துவைத்தார்

கொலன்னாவை, திங்கள்

''கைத்தொழில் அபிவிருத்தியில் பெற்றோலியம் [illegible]முக்கியமான இடத்தை வகிக்கிறது. பெற்றோலியப் [illegible]கள் எல்லாவற்றையும் [illegible]மே உற்பத்தி செய்ய வேண்டும்''

[illegible]கையில், பெற்றோலியம் பொருட்கள் எல்லாவற்றையும் இங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை உருவாவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

## சிங்களத்திலும் தமிழிலும் நிர்வாகத்தை நடத்துக

### பரந்தன் இரசாயனத் தொழிலாளர் மகஜர்

பருத்தித்துறை, திங்கள்

''ஆங்கில மொழியைநீக்கிவிட்டு நாட்டு மக்களின் மொழிகளான சிங்களத்திலும், தமிழிலும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை நிர்வாக அலுவல்களை நடத்த வேண்டும்'' என்று கோரும் ஒரு மகஜரை மேற்படி தொழிற்சாலையிலுள்ளகைத் தொழில் பொதுத்தொழிலாளர் சங்கம் தொழிற்சாலைத் தலைவருக்கும் 'வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமனுக்கும், வர்த்தக அமைச்சர் திரு. ரீ. பி. இலங்கரத்தினவுக்கும் அனுப்பியுள்ளது.

மேலும் இம் மகஜர் உஷ்ணம் சம்பந்தப்பட்ட பகுதிகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு மேலதிக சம்பளம் வேண்டுமென்றும், மேலதிக வேலை நிறுத்தப்படல்வேண்டுமென்றும் இப்பொழுதுள்ள தொழிலாளர்' முதலாளிகள் பிரதிநிதிகளைக் கொண்ட இணைப்புச்சபைக்குப் பதிலாக தொழிலாளர் சபை ஒன்று நிறுவப்படல் வேண்டுமென்றும் கோருகிறது,

நிர்வாக உத்தியோகத்தர் எவ்வாறு உயர்தரக் கல்விக்காகப் பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனரோ அதேபோல நுண்தொழிலாளரும் விசேட பயிற்சிக்கெனப்பிற நாடுகளுக்குஅனுப்பப்படல் வேண்டுமென்றும், மேற்படி தொழில்நிறுவனத்திற் கிடைக்கும் இலாபப்பணத்தில் ஒரு பகுதி தொழிலாளருக்கு'போனஸ்' ஆககொடுக்கப்படவேண்டும் என்றும் இம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ''கலைவளர்ச்சிக்கு பிரதேசங்கள் உழைக்க வேண்டும்''

— வடபகுதி வித்தியாதிபதி

உடுப்பிட்டி, திங்கள்

''கலைகள் ஆன்மீக உறவுள்ளவை தெய்வீகத்தன்மையைக்கலைகளில் தான் காணலாம். மனித உள்ளங்களை அமைதி பெறச் செய்து அன்பும் அறமும் நிறைந்த வாழ்வைக்கலைகள் மூலம் தான் பெற்றுக்கொள்ள முடியும் இக்கலைகளை நாம் போற்றிவளர்க்க வேண்டும் கலைவாழ்க்கையோடு இணைந்தது இரண்டையும் பிரித்து வாழுதல் முடியாது கலைகளை வளர்க்க ஒவ்வொரு பிரதேசமும் முயற்சி செய்ய வேண்டும்''.

மேற்கண்டவாறு வடமாநிலக்கல்வியதிபதி திரு, வி. சங்கரலிங்கம் நேற்றிரவு வடமராட்சி வடக்கு-கிழக்கு கலாமன்றக்கலைப் பெருவிழா இரண்டாம் நாள் விழாவுக்குத்தலைமை வகித்துப்பேசுகையில் கேட்டுக்கொண்டார், திரு. ஆ. தேவராசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

புலோலிகிழக்கு தமிழிசை மன்றத்தினரின் சிறுவர் மிருதங்கக்கச்சேரி இசைமணி கே, துரைராசாவின் இன்னிசைக்கச்சேரி, மன்னிப்பு பக்தநந்தனர், கைமுனுவின் காதலி ஆகிய நாடகங்களும் இடம் பெற்றன.

## வைத்திய சுப்பிரின்டன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

இளம்பிள்ளைவாத நோய் அறிகுறி காணும் குழந்தைகளை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுமாறு யாழ் மாவட்ட வைத்திய அத்தியட்சகர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். இது சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றையும் சகல ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இந்த நோயால் பீடிக்கப்படும் பெரும் தொகையான குழந்தைகள் நாளாந்தம் ஆஸ்பத்திரிக்கு வருவதாகவும், இந்நோய் வடபகுதியில் [illegible]வும் கண் காணிப்புடன் இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3 வயதுக்குட்பட்ட குழந்தைகளே இந் நோயினால் பீடிக்கப் பட்டுள்ளதாகவும், தடுப்பு மருந்து கொடுப்பதற்கு பெற்றோர் சுகாதாரப் பகுதியினருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். வயிற்றோட்ட நோய் காணும் சிறுவர்களையும் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச் [illegible]

இளம்பெண்கள்விவகாரம்:

## கேரளப் பாதிரியார் லண்டன் போகத்தடை

சென்னை, ஆக. 31

கேரளத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளில் கன்னியாஸ் [illegible]

டன் வரும்படி அந்த நிறுவனம் அவரை அழைத்திருந்தது. அங்கு போவதற்காக [illegible]

நிலையத்தில் மத்திய அரசின் உத்தரவின் மீது அவரிட மிருந்த பாஸ்போட்டை அதி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் போகத்தடை

சென்னை, ஆக. 31

கேரளத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளில் கன்னியாஸ்திரிகளாக பணிபுரிவதற்கு பெண்கள் கொண்டுசெல்லப்படும் விஷயத்தில் சம்பந்தப்பட்ட கத்தோலிக்க சாமியாரான பாதர் சிரியாக் புத்தேன்புரா என்பவரின் பாஸ்போர்டை இந்திய அரசாங்கம் திரும்பப்பெற்றிருக்கிறது.

ஐரோப்பாவுக்கு இளம் பெண்கள் வியாபாரத்துக்காகக்கொண்டு செல்லப்படுவதாகக் கூறப்படும் மோசடியில் இந்தப் பாதிரியாரின் பெயர் பிரபல்யமாக அடிபட்டுவந்துள்ளது. இவர் தமது கருத்தை பி. பி. ஸி. ஒலிபரப்பில் தெரிவிக்க லண்டன் வரும்படி அந்த நிறுவனம் அவரை அழைத்திருந்தது. அங்கு போவதற்காக பாதிரியார் கொச்சியிலிருந்து சென்னை வந்தார். விமான நிலையத்தில் மத்திய அரசின் உத்தரவின் மீது அவரிடமிருந்த பாஸ்போட்டை அதிகாரிகள் திரும்பப்பெற்றுக் கொண்டார்கள்.

## 'மன்னிக்க முடியாத விஷயம்'

லண்டனிலிருந்து வெளியாகும் 'கத்தோலிக்க ஹெறால்ட்' என்ற வாரப் பத்திரிகை ஒரு கட்டுரையில் இந்த விவகாரத்தில் பாதிரியார் எவரேனும் கமிஷன் பெற முயற்சித்திருப்பார்கள் என்ருல், அது மன்னிக்க முடியாத விஷயம் என்று கூறியிருக்கின்றது. கன்னிமாடப் பெண்களாகச் சேர வருபவர்களை ஏமாற்றுவதோ அல்லது நிர்ப்பந்திப்பதோ தேவாலயத்தின் விதிகளைக் கடுமையாக மீறுவது ஆகும் என்றும் அது கூறியது

இந்த வழியில் பணம் சம்பாதிக்க முற்படுவது அடிமை வியாபாரத்தில் ஈடுபடுவதைப் போன்றதே என்று அது கூறியது.

ஓர் ஐரோப்பிய கன்னியர் மடம் அதில் சேர முன் வரும் பெண்களின் விமானப் பயணத்திற்கோ அல்லது அவர்களின் குடும்பத்தினருக்கோ உதவவோ பணம் தருவதிலோ தவறு எதுவும் இல்லை என்று கட்டுரை கூறியது

## பெயரில் மாற்றமில்லை

கோட்டை, திங்கள்

'ஐக்கியதேசியக்கட்சி' என்ற பெயரில் எத்தகைய மாற்றமும் செய்யப்படமாட்டாதென ஐ. தே. கட்சித்தலைவர் திரு. டட்லி சேனநாயகா தெரிவித்துள்ளார்.

'ஐக்கிய தேசியக் கட்சியின் பெயர், 'ஐக்கிய சோஷலிஸ முன்னணி என மாற்றப்படலாம் என்றும், இவ்வாறு கட்சி இளைஞர்கள் முன்னர் கோரியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அந்தப் பெண்கள் மகிழ்ச்சியாக உள்ளனர்

இந்தியாவிலிருந்து வந்து இத்தாலியில் கன்னிமாடப் பெண்களாக உள்ளவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிருர்கள் என்றும், இவர்கள் நன்ருக நடத்தப்படுகிருர்கள் என்றும்வத்திக்கானிலிருந்து வெளியாகும் ஒரு வாரப்பத்திரிகை கூறியது.

இது சம்பந்தமாக ஐந்து பக்கக் கட்டுரையொன்றை அது வெளியிட்டிருக்கிறது. கட்டுரையில் சில படங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரையை தயாரிக்க அவகாசம் ஏற்பட்டதால், ஒருநாள் தாமதமாகக் கடைகளுக்குப் பத்திரிகை அனுப்பப்பட்டது.

கன்னிமாடப் பெண்களாக உள்ள இந்தியப் பெண்கள் நன்ருக நடத்தப்படுவது இல்லை என்ற புகாரை சில இந்தியப் பெண்கள் மறுத்தாகக் கட்டுரை குறிப்பிட்டிருக்கிறது.

கன்னியா குமரி

# விவேகானந்த நினைவு சின்னம் திறப்புவிழா

கன்யாகுமரி, ஆக். 31

கன்யாகுமரியில் அடுத்த புதனன்று விவேகானந்த பாறை நினைவுச்சின்னத்தை இந்திய ஜனதிபதி திரு. வி. வி. கிரி திறந்து வைப்பார்.

இந்த வைபவத்தைத் தொடர்ந்து இரண்டுமாதங்களுக்கு சுவாமிவிவேகானந்தர் சம்பந்தமான, கருத்துரைகள், சொற்பொழிவுகள் பஜனைகள் உபதேசங்கள் போன்றவற்றை நடத்துவதற்கான திட்டமொன்று வரையப்பட்டுள்ளது.

விவேகானந்தர் ஞானம் பெற்ற பாறையின் மீது அமைக்கப்பட்டுள்ள நினைவுச்சின்னத்துக்கு எதிர்ப்புறமாக விவேகானந்தபுரம் என்ற பெயரில் ஒரு பகுதி நிர்மாணிக்கப்படுகின்றது. இப்பகுதி புனித கைங்கரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

விவேகானந்த பாறைநினைவுச்சின்னம் உருவாக்குவதற்கு ஒருகோடிரூபாய்க்கு மேல் செலவாகியுள்ளதாம்.

... ...

## தேசிய இளைஞர் சபை

கோட்டை, ஞாயிறு

இளைஞர் சேவைத்திட்டங்களை வகுக்கவும், அவற்றைச் செயல்படுத்தவும் 5 பேர் கொண்ட ஒரு சபையைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா நியமித்துள்ளார்.

தேசிய அபிவிருத்தியில் இளைஞர்களை ஊக்குவிப்பதே இச்சபையின் முக்கியநோக்கமாகும். இத்தேசிய இளைஞர் சபையின் தலைவராக திரு. எம். பி. பி. தஸஜாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார், தகவல் ஒலிபரப்பு அமைச்சின் ஆட்சிமன்றக்காரியதரிசி திரு. சோமசர தஸநாயக்கா திருமதி ஜராய்கனி ரத்வத்தை, டாக்டர் புத்ததாஸாபோதிநாயக்கா. திரு சுனிமல் பெர்ஞன்டோ ஆகியோர் தேசிய இளைஞர்சபையின் மற்றைய அங்கத்தவர்களாவர்.

## புதிய தூதர்

கோட்டை, திங்கள்

இலங்கைக்கு சோவியத் சோஷலிச குடியரசின் தூதராக திரு. றபீக் நிஷாநோவை நியமிக்க சோவியத் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 44 வயதான திரு நிஷாநோவ் சில ஆண்டுகளாக தாஷ்கண்ட்மேயராக கடமையாற்றியுள்ளதோடு அரசாங்கத்திலும் உயர்பதவிகளை வகித்தவர்.

...பணியாற்றினர். 'சைவ நீதி' என்ற வருடாந்த சஞ்சிகையையும் ஆரம்பித்து வெளியிட்டார்.

தற்சமயம் இவர் சட்ட நூல்களை தமிழில்படைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிருர்.

கொழும்பு புனித பெனடிக்ட் கல்லூரி, உவெஸ்லி கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் கொக்குவிலைச் சேர்ந்த உலாந்தா இராசரத்தினத்தின் பேரனும், கொழும்பு மாநகரசபை சுப்பிரின்டென்டன் திரு. தம்பு சொக்கநாதன் திருமதி விமலா சொக்கநாதன் ஆகியோரின் மூத்த புதல்வருமாவார்.

—

ல சு க தொழிற்சங்கங்களை

## விசாரணை செய்ய விசேஷ கமிட்டி

கோட்டை திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொழிற்சங்கத்தை விசாரணையிட விசேட கமிட்டி ஒன்றைத் திருமதிபண்டாரநாயக்கா நியமித்துள்ளார்.

இக்கமிட்டி கட்சி யூனியனின் குறைபாடுகளையும் யூனியனைப் பலப்படுத்தக் கூடியயோசனைகளையும் தெரிவிக்கும், கட்சி எம். பிக்கள் கிளைக் காரியதரிசிகள், யூனியன் உத்தியோகஸ்தர்கள் ஆகியசகலரையும் செப்டம்பர் 10ந்திகதிக்கு முன்னர் காரியதரிசி திரு டி எம் ஜெயரத்னவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

...தியில் பெற்ரோலியப் ... முக்கியமான இடத்தை வகிக்கிறது. பெற்ரோலியப் பொருட்கள் எல்லாவற்றையும் நாமே உற்பத்தி செய்ய வேண்டும்''

இவ்வாறு கைத்தொழில் அமைச்சர் தி. ரி. பி. சுபசிங்கா கொலனுவையில் இன்று பெற்ரோலிய 'அக்ரோ' உற்பத்தி ஆலையை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் பெற்ரோலியப் பொருட்கள் எல்லாவற்றையும் இங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை உருவாவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் கூறினர்.

பெற்ரோலியம் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி பேசுகையில் இரு வருடங்களில் கூட்டுத்தாபனத்திலுள்ள சகல குறைபாடுகளும் நீக்கப்பட்டுவிடுமென்று தெரிவித்தார்.

## இடமாற்றத்தை வாபஸ் பெருவிடில் நேரடி நடவடிக்கையாம்

உடுப்பிட்டி, திங்கள்

''பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ பொறியியல் பணியக முகாமையாளர் திரு. டி. ஜி. கித்துதாஸா திடீர் இடமாற்றம் செய்யப்பட்டதை ஊழியர்கள் ஆட்சேபித்துள்ளனர். இம்மாற்றம் ரத்துச் செய்யப்படாத பட்சத்தில் பொறியியல் தொழிலாளர்கள், ஊழியர்கள் எந்த நேரத்திலும் நேரடி நடவடிக்கையில் இறங்கத்தயாராக உள்ளனரென்று மேற்படி டிப்போ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்கள் அறிவித்துள்ளனர். இவ்விடமாற்றத்தை உடனடியாக ரத்துச்செய்யுமாறு கோரும் அவசர வேண்டுகோளொன்றை டிப்போஊழியர்கள் இ. போ. ச. தலைவர் திரு. அனில்முனசிங்காவிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதுசம்பந்தமாக இ. போ. ச. தொழிற்சங்கத் தலைவர்கள் இ. போ. ச. தலைவரை நேரில் சந்தித்துப் பிரஸ்தாப இடமாற்ற உத்தரவை வாபஸ் பெறுமாறு கோர முகமாக கொழும்பு சென்றுள்ளனர்.

## தொழிலாளருக்கு வீட்டுத்திட்டம் வேண்டும்

பருத்தித்துறை, திங்கள்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்கள் பலருக்கு முடிக்குரிய காணிகள் வழங்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு அந்நிலங்களில் குடியிருப்பதற்கான வீடுகள் அமைத்துத்தருமாறு மேற்படி தொழிற்சாலையைச் சேர்ந்த கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்கத்தினர் இம்மாதம் 8ம் திகதி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கு வருகைதரவிருக்கும் வீடமைப்பு அமைச்சர் திரு பீட்டர் கெனமனைப் பேட்டிகண்டு கோரவிருக்கின்றர்.

சகல ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இந்த நோயால் பீடிக்கப்படும்பெரும் தொகையான குழந்தைகள் நாளாந்தம் ஆஸ்பத்திரிக்கு வருவதாகவும். இந்நோய் வடபகுதியில் அதிகமாகக் காணப்படுவதால் இது சம்பந்தமாக மிக...

...ற்கு பெற்ருேர் சுகாதாரப் பகுதியினருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். வயிற்ருேட்ட நோய் காணும் சிறுவர்களையும் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச் செல்லுமாறு பொதுமக்கள் கேட்கப்படுகின்றனர்.

## இன்றைய பலன்

(ஆவணி மாதம்14-ம் திகதி)
(1-9-70)

மேஷம்- தெய்வ வழிபாட்டுல் அதிக ஆர்வம் பிறக்கும் கால் நடைகள் விருத்திக்கும் இடமேற்பட முடியும்

ரிஷிபம்- நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின் மூலம் பணப்பலத்தைத் தேடிக்கொள்வீர்கள்.

மிதுனம்- அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம் செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு.

கடகம்- பொருள் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும், புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

சிம்மம்- ஏமாற்று வேலைகள் இடம் பெறும் வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி- குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிநிறைந்ததாக இருக்கும் உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும் நல்ல தினம்.

துலாம்- எதிர்பாராத விளைவுகளால் வேதனைப்படுவீர்கள். சிறிய விடயத்துக்குக்கூட குறை கேட்க நேரிடும்.

விருட்சிகம்- தங்கள் திறமை சுடர் விட்டுப்பிரகாசிக்கும் பொதுசனத் தலைமைக்கும் இடமேற்பட முடியும்.

தனு- நடுநிலை தவருது நல்லதைச் செய்வீர்கள். உங்கள் புத்திக்கூர்மையை மற்றவர்கள் பாராட்டுவார்கள்.

மகரம்- எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும், அவசர முடிவு ஆபத்தில் சிக்க வைக்கலாம்.

கும்பம்- பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும் குடும்ப வாழ்க்கை கற்கண்டு போல் இனிக்கும் மகிழ்ச்சியான தினம்.

மீனம்- நம்பிக்கை வைப்பதன் மூலம் பணம் பறிபோகலாம். புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை



## நாடு திரும்பினர்

யாழ்ப்பாணம், செவ்

தேசிய ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. இ. சிவநேசன் சங்கத்தின்பிரதிநிதியாக சர்வதேச சுதந்திரத் தொழிற் சங்கங்களின் அழைப்பின் பேரில் சம்மேளனத்தின் சர்வதேச மகாநாட்டிற்குச் சென்று திரும்பியுள்ளார். பேர்லின் ஜெனிவா ஆகிய நகரங்களில் பத்து நாட்களாக நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. சிவநேசன் கலந்து கொண்டு சமூகக்கல்வி, மாணவர் நிலை, ஆசிரியர் அந்தஸ்து, தொழிற்சங்க முன்னேற்றம் ஆகியன பற்றிய ஆராய்வுகளில் பங்கு கொண்டார். அத்துடன் பிரித்தானியாவிலுள்ள தேசிய ஆசிரியர் சங்க அமைப்பு முறை ஆகியன பற்றி அறிந்து கொண்டு, பாரிஸ், ரோம், அதென்ஸ் ஆகிய இடங்களையும் இவர் தரிசித்தார்.

திரு. சிவநேசன் சர்வதேச தொழிற்சங்க சம்மேளன மகா நாட்டில் தாம் பெற்ற அனுபவங்கள் பற்றி இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7-45-க்கு இலங்கை வானெலி தேசிய ஒலிபரப்பில் உரையாற்றுவார்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

# 'சைவ நெறியைப் போதிக்க முறையான ஸ்தாபனம் தேவை'

## சைவசமயகலைவிழாவில் யாழ் உதவிமேயர்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் சைவ சமயக் கலைவிழாவை யாழ் உதவி மேயர் 'சிவநெறிச் செம்மல்' திரு ஆ. துரைராசசிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். யாழ் நகர மண்டபத்தில் இச் சைவக் கலைவிழா நடைபெற்றது.

திரு துரைராசசிங்கம் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், 'சைவ நெறியைப் போதிக்கக் கூடிய ஸ்தாபனமொன்று நமக்குத் தேவை. அப்படியான ஒரு ஸ்தாபனமிருந்தால்தான், சைவத்தையும் தமிழையும் முறைப்படி நெறிப்படி பாதுகாத்துக் கொள்ளலாம். சைவப் புலவர்கள் இப்படியான கலைவிழாவொன்றை நடத்தி மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்கள்' என்று கூறினர்.

முதலியார் சி. முத்துத்தம்பி பேசுகையில், சைவத்தையும் தமிழையும் பாதுகாத்து வளர்த்த ஆறுமுக நாவலர் பணிகளையும், சுவாமிஞானப்பிரகாசர்பணிகளையும்நினைவுபடுத்தினர்.

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு அயராது உழைக்கும் சைவப்புலவர்களையும் அவர் பாராட்டினர்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி இக்கலை விழா நடைபெற்றது.

வடமாநில வித்தியாதிபதி திரு. வி. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சைவசமயக்கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'மெய்ப்பொருள் ஒன்றே; பல இல்லை' என்பது விளங்கியபின், அம் மெய்ப்பொருள் சிவபிரானே என்று உணரப்பெறுதலே ஞானத்தின் முடிந்த நிலையாகும். இதுவே 'சிவஞானம், சித்தாந்தஞானம்' என்றெல்லாம் உயர்த்திக் கூறப்படுகிறது. சிவ ஞானம் மற்றைய ஞானங்கள் எல்லாவற்றிலும் மேலானதாகும்.

--- ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 16-ந் திகதி (1-9-70)


## நல்ல யோசனைகள்

இந்தியப் பத்திரிகைகள் சஞ்சிகைகளை வர்த்தக முறையில் இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டும் என்றும் விரும்பியவர்கள் சந்தா செலுத்தி அவற்றை வரவழைப்பதற்கு வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தலைமையில் நியமிக்கப்பட்ட தமிழ்ப் பத்திரிகையாளர், எழுத்தாளர்கள், கல்விமான்கள் ஆகியோர் அடங்கிய குழு பிரதம மந்திரிக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரில் ஆலோசனை தெரிவித்திருக்கிறது. இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்கான பல நல்ல யோசனைகளையும் இந்தக்குழு தனது மகஜரில் தெரிவித்திருக்கிறது. இந்த யோசனைகள் அனைத்தும் ஏககாலத்தில் சரியான முறையில் செயல்படுத்தப்பட்டால் வாசகர்களின் இரசனைச் சுதந்திரம் பாதிக்கப்படமாட்டாது. அதே சமயம் ஈழத்து இலக்கியமும் வளர்ச்சியடையும்; நமது நாட்டுப் பணமும் வீணாக வெளியே செல்லாது

தென்னிந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இறக்குமதி தடைசெய்யப்பட வேண்டுமென்ற குரல் பலமாக ஒலிக்கத் தொடங்கியபோது பலர் மனதிலும் பலவிதமான சந்தேகங்களைத் தோற்றுவித்தன. தென்னிந்தியாவிலிருந்து இங்குவரும் அத்தனை பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தடைசெய்யப்படவேண்டுமென்றோ அத்தனையும் தடைசெய்யப்படக்கூடாதென்றோ யாரும் அபிப்பிராயம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. தரமற்றவை தென்னிந்தியாவிலிருந்து வந்தாலும் சரி வேறெங்கிருந்து வந்தாலும் சரி அவை தடைசெய்யப்படவேண்டுமென்ற குரல் ஒலிக்கத் தொடங்கியதற்கு, அவற்றால் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படுகிறதென்பது அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகும். இதை மனத்தில் இருத்தி அந்தக் குழு ஆக்கபூர்வமான ஏழு யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது. இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வர்த்தக முறையில் இறக்குமதி செய்வதை நிறுத்தும் அதே சமயம் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாக அளிக்கப்படவேண்டிய அந்த ஏழு யோசனைகளையும் செயல்படுத்த வேண்டுமென்றும் யோசனை தெரிவித்திருக்கிறது. (இந்த யோசனைகள் அடங்கிய அந்தக் குழு சமர்ப்பித்த மகஜரின் முழுவிபரமும் இதே பக்கத்தில் பிறிதோரிடத்தில் பிரசுரமாகியிருக்கிறது.)

இலங்கையில் தரமான பத்திரிகைகளையோ, தரமான சஞ்சிகைகளையோ வெளியிடுவோரும், வெளியிட முனைந்தவர்களும் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. வெளிநாடுகளிலிருந்துவரும் தரமற்றவைகளோடு மட்டுமல்ல உள்நாட்டிலிருந்தே வெளிவரும் தரமற்றவைகளோடும், போட்டிபோட வேண்டிய துர்ப்பாக்கியநிலை.

அமைச்சர் தலைமையிலான குழு தெரிவித்துள்ளதுபோல் தரமான சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வெளியிடும் நிறுவனங்களுக்கும் புதிதாக வெளியீடுகளைக் கொணர முனையும் கலை இலக்கிய நிறுவனங்களுக்கும் கூட்டுறவு அமைப்புக்களுக்கும் இலக்கிய ஆர்வமும் ...

## தென்னிந்திய பத்திரிகைகள் சஞ்சிகைகள்

# வர்த்தக முறைஇறக்குமதியை தடைசெய்து சந்தாவுக்கு அனுமதி

## அமைச்சர் நியமித்த குழு பிரதமருக்கு சமர்ப்பித்த மகஜர்

### உள்நாட்டில் இலக்கியவளர்ச்சிக்கு ஊக்கமளிக்கவும் யோசனைகள்

இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவால் அமைச்சர் திரு சி. குமாரசூரியர் தலைமையில் அமைக்கப்பட்ட தமிழ்ப் பத்திராதிபர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள் ஆகியோரைக் கொண்ட தமிழ் ஆலோசனைச்சபை இந்தியத் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இறக்குமதி பற்றிய விவகாரத்தில் பிரதமருக்கு ஒரு மகஜரைச் சமர்ப்பித்துள்ளது.

இந்தப் பிரச்னைப் பல்வேறு கோணங்களில் வைத்து ஆராய்ந்த சபை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உகந்த ஆரோக்கியமான சூழலையும் முன்தேவையையும் உருவாக்கும் ஒரே நோக்குடன் பல கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவித்துள்ளது.

இவைகுறித்து மக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அறிந்து கொள்வது என்றும் சபை முடிவு செய்துள்ளது. மக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் விரிவாக ஆராயப்பட்டு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப் படும்.

தமது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்கள் இவ்வருடம் செப்டம்பர் 15ந் திகதிக்கு முன்னர் அவற்றை எழுத்துமூலம் செயலாளர், தமிழ் ஆலோசனைச் சபை, 4/44 தலகொட்டுவ, பொல்ஹென்கொட ரோட், கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

தமிழ் ஆலோசனைச் சபையில் 'ஈழ நாடு' ஆசிரியர் கே. பி. ஹரன், 'வீரகேசரி' ஆசிரியர் கே வி எஸ். வாஸ், 'தினபதி' ஆசிரியர் எஸ். ரி. சிவநாயகம், 'தினகரன்' ஆசிரியர் கே. சிவகுருநாதன், வீரகேசரி நிர்வாக ஆசியர் சிவப்பிரகாசம், 'டெயிலி மிரர்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சி. முத்துக்குமார், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குனர் சபை உறுப்பினர் எச். எம். பி. முகைதீன், 'தேசாபிமானி' ஆசிரியர் பிரேம்ஜி, ஆகிய பத்திரிகையாளர்களும், கே. லக்ஷ்ம ...

... திரிகைகள், சஞ்சிகைகளினாலேற்படும் தாக்கம் பற்றியும் அத்தாக்கத்தினைக் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்குமான வழிவகைகள் பற்றியும், நாம் விவாதித்தோம் பின்னர் இதற்கென அமைக்கப்பட்ட உப குழு நிலையில், இப் பிரச்சினை மேலும்விரிவாகவும்ஆழமாகவும், பலகோணங்களிலிருந்தும் ஆராயப்பட்டது. அந்தப் பரந்த கருத்துப் பரிமாறலின் பயனால் நாங்கள் இப்பிரச்னை குறித்து கீழ்வரும் நிலைபாடுகளுக்கும் முடிவுகளுக்கும் ஏகமனதாக வந்துள்ளோம்.

தென்னிந்தியத் தமிழ்ச் சஞ்சிகைகள், கட்டற்ற முறையில் இலங்கை வந்தடைவதால், ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது என்றும் அந்நிலையை மாற்றுவதற்கான கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பலர், பல வருடங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்தனர்.

ஈழத்துப் பிரச்னைகளையும், ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளையும் பொருளாகக்கொண்டு இலக்கியமாக்கி வந்தவர்களும், அத்தகைய இலக்கியத்தின் அத்தியாவசிய தேவையை யுணர்ந்தவர்களும், ஈழத்தின் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் சிறப்பையுணர்ந்தவர்களும், அதனைப் பேணுபவர்களுமாகிய பலர் சென்ற தசாப்தத்தின் ஆரம்பத்தில் (19.. 1963-ல்) ஒருங்கு சேர்ந்து மேற்படி கருத்தினை நிறுவன அடிப்படையில் முன் வைத்தனர். ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பொருளாகக்கொண்ட ...

... யும், இன்னல்களுக்கிடையும் வெளியிடப்பட்டு வரும் சஞ்சிகைகள் இலாபகரமான முயற்சிகளாக முகிழ்க்க முடியாதிருக்கும், நிலையும் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

இந்திய சஞ்சிகைகள், பத்திரிகைகளின் தாக்கம் தேசிய அடிப்படையில் நம் நாட்டின் நலன்களைப் பாதிப்பதுடன், நமது நாட்டின் தனித்துவம் வாய்ந்த தமிழ் இலக்கியப் பாரம்பரியத்திற்கும், உணர்வுக்கும் ஊறு விளைக்கின்றன.

இந் நிலையில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குத் தேவையான பாதுகாப்பையும், நல்ல சூழலையும் உருவாக்குவதற்காக, இந்தியப் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் கட்டுப்பாடற்ற வர்த்தக முறையிலான வருகையைக் கட்டுப்படுத்துவது முக்கிய தேவையாகின்றது.

ஆனால் இதைநாம் வற்புறுத்திக் கூறும் அதே வேளையில் இந்தியத் தமிழ் மக்களிடத்தும் அவர்களிடையேயுள்ள நல்லிலக்கியகர்த்தாக்களிடத்தும், அத்தகையோரின் இலக்கியப் படைப்புக்களிடத்தும் எமக்குள்ள பெருமதிப்பையும், ஆர்வத்தையும் குறிப்பிட விரும்புகின்றோம். தமிழ் நாட்டிலிருந்து வரும் தரமான இலக்கியப் படைப்புக்களை அறிவதும், சுவைப்பதும், தமிழ் நாட்டிற்கும் ஈழத் தமிழருக்குமுள்ள கலாச்சார உறவையும், பரிச்சயத்தையும், பேணுவதும் பேணி வளர்ப்பதும் மிகவும் அத்தியாவசியமானவை என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

... ஒரு நாட்டிலிருந்து வரும் இலக்கியப் படைப்புக்களையும் பெற்றுக் கொள்ள ...

... சாங்க ஆணைக்குட்பட்ட கூட்டுத்தாபனங்களும் இப்பிரசுரங்களுக்கு விளம்பரங்கள் கொடுத்தல்.

(5) கலாசார திணைக்கள கல்வித்திணைக்கள மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலம், இச்சஞ்சிகைகளைக் கொள்வனவுசெய்து பொது நிலையங்கள் பாடசாலைகள் போன்ற நிறுவனங்களிற்கு இலவசமாக விநியோகித்தல்

(6) தனியார் துறையினர் தமது வருடாந்த விளம்பரச் செலவு தொகையில் ஒரு குறிப்பிட்டளவு தொகையை இத்தகைய பிரசுரங்களில் விளம்பரம் செய்வதற்கு ஒதுக்குமாறு சட்டபூர்வமாக நியதிப்படுத்தல்,

(7) ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மிகக் குறைந்த கட்டணத்தில் சஞ்சிகைகளின் விளம்பரங்களை ஏற்று விளம்பரப்படுத்தல்.

மேலும், இவையாவற்றையும் நன்கு செயற்படுத்தவும், இவை சம்பந்தமாகத் தோன்றும் பிரச்னைகளை அவ்வப்போது ஆராய்ந்து தீர்வு காண்பதற்கும் கலாசார அமைச்சின்கீழ் விசேட குழு ஒன்று நியமிக்கப்படுவது அத்தியாவசியமென நாம் கருதுகிறோம்.

ஈற்றில், தமிழ் பேசும் மக்களின் கலை இலக்கிய வளர்ச்சியில் தாங்கள் காட்டும் பேரார்வத்திற்காகத் தங்களுக்கு எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றோம்.

தென்னிந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் இறக்குமதிக்குத் தடைசெய்யப்பட வேண்டுமென்ற குரல் பற்றி பல்வேறு துறையைச் சார்ந்தவர்களிடமிருந்தும் பெற்ற பலதரப்பட்ட அபிப்பிராயங்களும் நேற்றைய 'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்தது வாசக நேயர்கள் அறிந்ததே. வாரமலரில் இடமின்மையால் வெளிவரத் தவறிய மற்றும் சிலரின் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

### புத்தியல்ல

இந்தியப் பத்திரிகைகளைத் தடைசெய்வது அவ்வளவு புத்தியான காரியமல்ல ஒப்புமையாக்கம் என்ற மனித பொதுமைத் தத்துவத்திற்குப் பொருந்தாமையோ இதற்குக் காரணமாகும். ஈழத்தின் கருத்துலகின் தனித்துவத்தைத் தலைப்படுத்தி மேம்படுத்துவதற்கு இதுவும் ஒரு வழியாக அமையும் எனினும் மூலக்கருத்துலகான இந்தியாவை மறைத்துவிட்டு வாழ முயல்வதானால் நாம் தறுக்கணித்து நிற்கும் மரத்தையோ செடியையோ போலாகி விடுவோம்.

புலவர் நா சிவபாதசிந்தரம்

### ஆபாசத்துக்கு தடை தேவைதான்

பழம்பெரும்எழுத்தாளர், எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவுமிருந்தவர், ஒய்வு பெற்ற ஆசிரியர் திரு. க. தி. சம்பந்தன் அபிப்பிராயம் இது:-

ஆபாசமான வெளியீடுகளை அவசியம் தடைசெய்யவே வேண்டும். ஆனால் பெரும்பாலான சஞ்சிகைகள் அறிவு வளர்ச்சியைத் தடைசெய்யவில்லை, தென்னிந்தியப் பத்திரிகைகள்மட்டுந்தான் ஆபாசமான பத்திரிகைகள் என்று கூற முடியாது. ஏனைய வெளிநாடுகளிலிருந்தும் ஆபாசமான பத்திரிகைகள் வெளிவருகின்றன. நடுநிலை பரவலாக இருக்க வேண்டும். அறிவுத்துறையை வளப்படுத்துகின்ற பத்திரிகைகளை வரவேற்கவேண்டும். அரசியல் பிரசாரங்களுக்கான பத்திரிகைகள் மூலாதாரமான அறிவை வளர்க்கின்றனவல்ல; அவற்றை அனுமதிக்கும் நாம் நல்ல இலக்கியங்களை நல்ல நோக்கங்களைத்தந்து வளர்க்கின்றபத்திரிகைகளை அவசியம் வரவேற்கவேண்டும்.

### மனித உரிமை

கத்தோலிக்க மதகுரு திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்திருநீ மரியசேவியர் அவர்கள் கருத்து:-

சிந்தனைச்சுடரின் அடிப்படையும் வெளிப்படையும் சுதந்திரம். சிந்தனை விருத்திக்கு எந்த எந்த முறையில் தடைவிதித்தாலும் அது அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதித்ததாகவே முடியும். என்னுடைய கருத்துப்படி வெளிநாட்டு நூல்களும், சஞ்சிகைகளும்தினத்தாள்களும் சிந்தனை விருத்திக்கு அவசியம். எதையும் படித்தறிய எந்த நூல்களையும் வாசிக்க எந்த மனிதனுக்கும் உரிமை வேண்டும். அதிற் தலையிடுவது சுதந்திரத்தைப் பறிப்பதற்குச் சமனாகும். இருந்தும் அறநெறியைப் பாதிக்கும் எதையும் உள்நாட்டுச் சரக்கோ வெளிநாட்டுச் சரக்கோ தடைசெய்வது ஆட்சிப்பொறுப்பாளரின் கடன்.

### இங்கு இல்லையா?

வாசகர்களைப் படுகுழியில் தள்ளக்கூடிய பத்திரிகைகள் இலங்கையிலும் உள்ளன. நமது பார்வையில் அப்பத்திரிகைகள் உலவுகின்றன. இவற்றை ஏன் கவனிக்கத் தவறுகின்றோம்.

வெளிநாடுகளிலிருந்துவருகின்ற நல்ல கலைஞர்களையும் வரவேற்பதுபோல நல்ல சஞ்சிகைகளை வரவேற்கவேண்டும். நடுநிலையோடு இப்பிரச்னையை அணுகவேண்டும். அந்தநாடும் நடுநிலைமையைவிட்டுப் பிறழாமல் நிர்ணயஞ்செய்து நல்லனவற்றை இறக்குமதி செய்தல்வேண்டும். ஆபாசமானவற்றை மக்களே நிச்சயம் புறக்கணிப்பர். ஆனால்வெளிநாட்டின்மீது கண்வைக்கும் நாம் உள்நாட்டிலும் பார்வையைச் செலுத்துதல் வேண்டும்.

கே. சித்திவிநாயகம்
எம். என். செல்லத்துரை
(சங்கீதக் கலைஞர்கள்)

## பசிபட்டினியைத் தீர்க்க நல்லவழி கிடையாதா?

'துலாபாரம்' எனும் படத்தி பிணியைத் தீர்க்க வழிவகை ... செய்ய முற்படலாமென்றும் ...

ஐயாறன் எழுதியது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவையும் தடைசெய்யப்படக் கூடாதென்றே யாரும் அபிப்பிராயம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. தரமற்றவை தென்னிந்தியாவிலிருந்து வந்தாலும் சரி வேறெங்கிருந்து வந்தாலும் சரி அவை தடைசெய்யப்பட வேண்டுமென்பதில் இரண்டுபட்ட அபிப்பிராயம் இருக்கவில்லை. ஆனாலும் 'தரமற்ற குப்பைகள்' என்பதை யார் நிர்ணயிப்பது என்ற கேள்வி எழுந்தது. இந்தப் பிரச்னைக்கிடமில்லாமல் அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு விவேகத்துடன் நடந்துகொண்டிருக்கிறது. தரமானவை எவை, தரமற்றவை எவை என்பதை வாசகர்களின் விவேகத்துக்கே இந்தக் குழு விட்டு வைத்திருக்கிறது. பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் பெருமளவில் இறக்குமதி செய்து அதன் மூலம் செலாவணி மோசடி நடைபெறுவதைத் தடுக்கவும் வாசிப்பதற்கு நல்லவை கிடைக்காத சமயத்தில் 'குப்பைகளை' வாசகனிடம் நிர்ப்பந்தமாகத் திணிக்காத நிலையை உருவாக்கவும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வர்த்தக முறையில் இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டுமென்று அந்தக்குழு சிபார்சு செய்திருக்கிறது. வாசகர்கள் தனிப்பட்ட முறையில் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்குச் சந்தா செலுத்தி அவற்றைப் பெறுவதற்கு உத்தரவாத மளிக்கப்பட வேண்டுமென்றும், சந்தா செலுத்திப் பெறப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு 'பீக்ஸ்' எனப்படும் அந்நியச் செலாவணிச் சான்றிதழ் திட்டத்திலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டுமென்றும், சந்தாக்களை இலகுவான முறையில் செலுத்துவதற்கான வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் அந்தக் குழு நல்ல யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது.

தினசரி அல்லது வாராவாரம் சில சதங்களைச் செலுத்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாங்கும் வாசகர்களில் பலரும் ஒரே தடவையில் ஆறு மாத, ஒரு வருட சந்தாவாகப் பெரியதொரு தொகையைச்செலுத்துவதென்பது சுலபமல்ல. இத்தகையவர்கள் தாம் விரும்பிய பத்திரிகைகள் சஞ்சிகைகளைச் செலவோடு செலவாகப் பெற்றுக்கொள்வதற்கு 'வாசகர் வட்டங்கள்' போன்ற அமைப்புக்கள் மூலம் வசதி செய்வதும் நல்லது.

இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் இறக்குமதி சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வெளியிடும் நிறுவனங்களுக்கும் புதிதாக வெளியீடுகளைக் கொணர முனையும் கலை இலக்கிய நிறுவனங்களுக்கும் கூட்டுறவு அமைப்புக்களுக்கும் இலக்கிய ஆர்வமும் நோக்குமுள்ள தனிப்பட்டவர்களுக்கும் அரசாங்கம் கடன் வசதிகள் வழங்குவதும் இதரவசதிகளும் சலுகைகளும் வழங்குவதும் அவசியமாகும்.

வெளிநாட்டிலிருந்து வரும்பத்திரிகைகள், சஞ்சிகைகள் தரமற்றவை எனக் கூறிவிட்டு அவற்றையே பின்பற்றி இங்கும் அதே 'குப்பை'களை வெளிநாட்டுநடிகைகளின் ஆபாசப் புகைப்படங்களையும் பிரசுரித்து வெளியிடுவது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு எவ்வகையிலும் உதவிசெய்யாது.

வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும் முறையிலும், ஆபாசச் செய்திகளையும் புகைப்படங்களையும் வெளியிட்டும் வந்த சுமார் இருபத்துநான்கு பத்திரிகைகளுக்கு இந்திய அரசாங்கம் விளம்பரம் கொடுப்பதை நிறுத்தியிருக்கிறது. இதுவும் நம் நாட்டு அரசாங்கம் சிந்திக்கக்கூடிய முன்மாதிரி நடவடிக்கையாகும்.

எழுத்தாளர், கல்விமான்கள், பத்திரிகை ஆசிரியர்கள், சமூக, சமயப் பெரியார்கள் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று நியமித்து தரமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், தரமற்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆபாச இலக்கியங்கள் என்பவற்றைத் தரம்பிரித்துக் கொள்ளலாம்.

அமைச்சர் தலைமையிலான குழுதெரிவித்துள்ள யோசனைகளுடன் இது பற்றியும் அரசு ஆராய்வது பயன் தரும்.

## 80 புதிய நெற் களஞ்சியங்கள்

கோட்டை, ஞாயிறு

உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நாடு பூராகவும் மேலும் 80 நெற்களஞ்சியங்களை நிறுவ விவசாய சேவை இலாகா தீர்மானித்துள்ளது. விவசாயிகளிடமிருந்து இலகுவாக நெல்லைக் கொள்முதல் செய்யவும் அதே வேளையில் நெல்லை பழுதடையாமல் நன்றாகப் பாதுகாக்கவுமே அரசாங்கம் மேற்படி 80 நெற்களஞ்சியங்களை நிறுவுகிறது.

குழுவைச் சேர்ந்த சி. முத்துக்குமார், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குனர் சபை உறுப்பினர் எச். எம். பி. முகைதீன், 'தேசாபிமானி' ஆசிரியர் பிரேம்ஜி, ஆகிய பத்திரிகையாளர்களும், கே. லக்ஷ்மணன், மு. கணபதிப்பிள்ளை, சலாநிதி கே. கைலாசபதி கலாநிதி கே. சிவத்தம்பி ஆகிய கல்விமான்களும் எழுத்தாளர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

இச் சபையில் மலைநாடு, மட்டக்களப்பு, மற்றும் பகுதிகளைப் பிரதிபலிக்கும் மேலும் ஐவர் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள்.

பிரதம மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் விபரம் வருமாறு:

தமிழ் பேசும் மக்களின் கலை, இலக்கிய, கலாசார அலுவல்கள் சம்பந்தமாக தமிழ்ப் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், அறிவுத்துறையாளர்கள், கலாசார ஊழியர்கள், ஆகியோரின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக நீங்கள் மேற்கொண்டுள்ள முயற்சியை நாம் இதயமார வரவேற்கின்றோம்.

இந்தப் பெரு நோக்கை மனதிற் கொண்டு அமைச்சர் செ. குமாரசூரியர் மூலம் நீங்கள் தமிழ் ஆலோசனைச் சபையை அமைத்ததற்காகத் தங்களுக்கு எமது நன்றியையும் கடமைப்பாட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீங்கள் அமைத்துள்ள இந்த ஆலோசனைச்சபையில் பணியாற்றவும், சபையின் கவனத்திற்கு வரும், வரவேண்டிய பல்வேறு விடயங்கள் பற்று எமது கருத்துக்களையும், தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களையும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், சுதந்திரமாகவும் தங்கட்குத் தெரிவிப்பதற்குச் சம்மதமும் உறுதியுமளிக்கின்றோம்.

மக்கள்பற்றியெழும் பிரச்சினைகளை, சம்பந்தப்பட்ட பிரிவினருடன் கலந்தாலோசித்து முடிவு செய்வதாம் ஜனநாயகக் கோட்பாட்டின் நல்லதோர் வெளிப்பாடாகவே தங்களது, இம் முயற்சியை மதிப்பிடுகின்றோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். எனவேதான் எமது நண்பர், அமைச்சர் குமாரசூரியர் தலைமையில் பணியாற்றக் கிடைத்த இவ் வாய்ப்பை இதயசுத்தியுடன் வரவேற்கின்றோம்.

அமைச்சர்கூட்டிய முதலாவது அமைப்புக் கூட்டத்தில் நாங்கள், ஈழத்துத் தமிழ் இலக்கிய முன்னேற்றத்தினைக் கட்டுப்படுத்தும் முக்கிய அம்சங்களில் ஒன்றான, இந்தியத் தமிழ் பத்தத்தின் ஆரம்பத்தில் (19.. 1963-ல்) ஒருங்கு சேர்ந்து மேற்படி கருத்தினை நிறுவன அடிப்படையில் முன் வைத்தனர். ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கையை .. பொருளாகக்கொண்ட இலக்கியங்கள் தோன்றுவதற்கும், அத்தகைய படைப்புக்களைப் பிரசுரிக்கும் தேசியச் சஞ்சிகைகள் வளர்வதற்கும் வேண்டிய சாதகமான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்றும், அத்தகைய இலக்கியங்கள் பற்றிய ரசனையைப்பொது மக்களிடையே வளர்ப்பதற்கு வேண்டிய சாதகமான சூழ்நிலைகளைஉருவாக்க வேண்டுமென்றும் அவ்வளர்ச்சிகளைப் பாதிக்கும் இந்திய தமிழ்ச் சஞ்சிகைளின் கட்டுப்பாடற்ற வருகையைக்கட்டுப்படுத்த வேண்டுமென்றும், அதேவேளையில் இந்தியத் தமிழ் மக்களுக்கும் ஈழத்துத் தமிழ் மக்களுக்குள்ள பண்பாட்டுத்துறை உறவோ, அல்லது நேர்மையான இருவழிக் கலாச்சாரப் பரிவர்த்தனையோ பாதிக்கப்படலாகாது என்றும் அவ்வியக்கத்தினர் வற்புறுத்தினர். இவ்வியக்கம் பலராலும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது தேசியத் தினசரிகளுக்கும், வாரப் பத்திரிகைகளும் இக்கோரிக்கைகளைப் படிப்படியாக வலியுறுத்த தொடங்கின. இது இன்று தமிழ் மக்கள் பலர் விரும்பும் கருத்தாகப்பரிணமித்துள்ளதென்பதைத் தினசரிப் பத்திரிகைகளில் வரும் செய்திகள் எமக்குணர்த்துகின்றன.

இந்த இயக்கத்தின் வரலாற்றையும், ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் தேவைகளையும் மனதிற்கொண்டு, நாம் இப்பிரச்னையைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் பல்வேறு நிலைகளில் வைத்தும் ஆராய்ந்தோம்.

### பாதிப்பதை ஒப்புக்கொள்வர்

இந்தியாவிலிருந்து கட்டெதுவுமற்ற முறையிலே தமிழ்ச் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் வருவது ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியை பாதிக்கின்றதென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். இந்திய பத்திரிகைகளின் கட்டுப்பாடற்ற ஏகபோகமும், அவற்றிடையே காணப்படும் போட்டியும், ஈழத்தில் கலை இலக்கிய சஞ்சிகைகள் தோன்றுவதையும், நிலையாகப் பிரசுரிக்கப்படுவதையும் சாத்தியமற்ற செயல்களாக்கி விடுகின்றன. இத்துறையில் தனிப்பட்ட துறையிலும், நிறுவன முறையிலும் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிக்கேற்பட்ட தோல்வி வளர்ப்பதும் மிகவும் ..தியாவசியமானவை என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

எந்த ஒரு நாட்டிலிருந்து வரும் இலக்கியப் படைப்புக்களையும் பெற்றுக் கொள்ளவும் படித்தின்புறவும் ..ட்டு மக்களுக்குள்ள அடிப்படையுரிமையை நாம் பெரிதும் மதிக்கின்றோம்; இந்தஉரிமை சட்டவழியாலும், நடைமுறை நிலையிலும் மதிக்கப்பட வேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம்.

இவற்றை மனத்தில் நிறுத்தி இந்தியத் தமிழ்ப் பத்திரிகைகள் இறக்குமதி சம்பந்தமாக நாம் பின்வரும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

(1) இந்தியத் தமிழ்ப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வர்த்தக முறையில் இறக்குமதி செய்வதை நிறுத்தல் வேண்டும்.

(2) வாசகர்கள், தனிப்பட்ட முறையில், மேற்குறிப்பிட்டுள்ள சஞ்சிகைகளுக்குச் சந்தா செலுத்தி அவற்றைப் பெறுவதற்கு உத்தரவாதமளிக்கப்படல் வேண்டும்.

(3) சந்தா செலுத்திப் பெறப்படும் மேற்படி பத்திரிகைகளுக்கு 'பீக்ஸ்' திட்டத்திலிருந்து விலக்கு வழங்கப்படல் வேண்டும்.

(4) சந்தா செலுத்திப் பத்திரிகைகளைப் பெற விருப்புவோர் அச் சந்தாக்களை இலகுவான அடிப்படையில் செலுத்துவதற்கான வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

மேற் குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதே வேளையில், ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு கீழ்க்காணும் ஆக்கபூர்வமான உதவிகள் வழங்கப்படல் வேண்டுமென நாம் பெரிதும் வேண்டுகின்றோம்

(1) தரமான சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் வெளியிடும் அல்லது புதிதாக ஆரம்பிக்க முனையும் கலை இலக்கிய நிறுவனங்களுக்கும் கூட்டுறவு அமைப்புகளும், இலக்கிய ஆர்வமும் நோக்குமுள்ள தனிப்பட்டவர்களுக்கும், அரசாங்கம் கடன் வசதிகள் வழங்கல்.

(2) இவ்வாறு பிரசுரிக்கப்படுவனவற்றிற்கு, ஒருகுறிப்பிட்ட காலத்திற்கு, குறிப்பிட்டளவு கடதாசியை மானியவிலையில் கொடுத்துதவுதல்.

(3) கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய அச்சகத்திலோ அன்றேல் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் அரசாங்க அச்சுக்கூட்டுத்தாபனத்திலோ இத்தகைய சஞ்சிகைகள், பத்திரிகைகளைக் குறைந்த செலவில் அச்சிட்டுக்கொடுத்துதவுதல்.

(4) அரசாங்கமும், அர

# ஐயாறன் எழுதுகிறார்

## பசிபட்டினியைத் தீர்க்க நல்லவழி கிடையாதா?

'துலாபாரம்' எனும் படத்தின் பத்திரிகைக் காட்சி கொழும்பில் ... நடைபெற்றது. படம் பாதிக்கு மேல் ஓடியபின்பே பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. இந்தியாவிலே ஜனாதிபதியின் பரிசு பெற்ற படமென்று கேள்விப்பட்டதால், அது எப்படி இருக்கிறதென்று பார்க்கச் சென்றேன்.

ஒரு படித்த பணக்காரப் பெண், ஏழைத் தொழிலாளியை விவாகம் செய்து கொள்கிறார். வேலைநிறுத்தம் நடக்கிறது. எளிய தொழிலாளரின் அடுப்பங்கரையிலும் பல நாட்கள் வேலைநிறுத்தம். தொழிலாளி ராமுவுக்கு மூன்று குழந்தைகள். ராமு குத்திக் கொல்லப்படுகிறார். குழந்தைகளும், மனைவியும் பட்டினி. பசியால் பிச்சையெடுக்கின்றன குழந்தைகள். தாய் அவர்களைப் பிச்சையெடுக்காதே என்று கண்டிக்கிறார். பின்னர் பசி காரணமாகத் திருடுகின்றன. 'அருள் சோதி ஓட்டல்' சொந்தக்காரர் திருடிய குழந்தையின் கையில் சூடு போடுகிறார். அவ்வளவு அருள்! தொழிலாளியின்மனைவியான சாரதாவுக்கு ஒரு வேலையும்கிடைக்கவில்லைகொண்டு வந்த உணவில் பாதியை நாய் தின்றுவிடுகிறது. 3 குழந்தைகளுக்கும் விஷமளித்து தானும் விஷம் கலந்த உணவைச் சாப்பிடும் காட்சியைப் பார்க்கச் சகிக்கவில்லை. கண்ணைப் பன்முறையும் மூடிக்கொண்டேன். கல்மனமும் கரையக்கூடிய படம்.

இவ்வளவு கஷ்டங்கள் நிறைந்த இப்படத்தைப் பார்க்கச் சென்னையில் தாங்கமுடியாத கூட்டமாம். 'பிளாக்மார்க்கட்'டில் டிக்கெட் வாங்கி, அங்கு அப்படத்தைப் பார்த்த ஒருவர் படத்தின் முதற்பகுதி மிகக் கவர்ச்சியாக இருப்பதாயும் நகர்ப்புறங்களில் ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கையை இப்படம் அப்படியே காட்டுவதாயும், இதைப் படம் பிடித்துக் காட்டியதால், இக்கஷ்டத்தைத் தீர்க்க வழிவகை செய்ய வேண்டிய அவசியத்தைச் சமூகம் உணர்ந்து, பசிப்பிணியைத் தீர்க்க வழிவகை செய்ய முற்படலாமென்றும் சொன்னார். அவசியம் பார்க்கவேண்டிய படமெனவும் சொன்னார்.

சமூகத்திலே பல சிக்கல்கள் ஏற்படுவது சகஜம். ஆனால் பசிப் பிணியைத் தீர்க்க நல்ல வழி கிடையாதா? இதை அரசாங்கம் தான் தீர்க்கவேண்டுமா? சமூகம் இதற்கான நல்ல ஏற்பாடு எதுவும் செய்யமுடியாதா? என்பன முக்கிய கேள்விகள். எனக்கு உடனே கதிர்காமம் தான் நினைப்பு வந்தது. அங்கு ராமகிருஷ்ண மடத்தில் வந்தவர்களுக்கெல்லாம் உணவு அளிக்கின்றனர். யாரும் காணிக்கை கொடுத்தால் வாங்கிக்கொள்கின்றனர். யாரையும் பணம் கேட்பதில்லை. இம்முறை திருவிழாக்காலத்திலே வருமானத்தைவிட, அன்னதானத்திற்குப் பன்மடங்கு செலவாயிற்றாம், என்றாலும் முருகன் எப்படியோ கொடுத்துவிடுவார் என்றார், சுவாமி. பசிப் பிரச்னையை அன்னதானத்தின் மூலம் தீர்க்கமுடியுமென்றும் அங்கு கண்டேன். அன்னதானம் நடவாவிட்டால், அவ்வளவு ஏராளமான மக்கள் கதிர்காமத்திற்கு வருவார்களா என்பது சந்தேகம்.

தமிழ்ப் பண்பு என்பது சிறப்பாக வந்தவர்களுக்கு எல்லாம் உணவு அளிப்பது தான். ஆனால் 'நாகரீகம்' முற்ற முற்ற, அந்தப் பண்பை மறந்தோம். 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழிப்போம்' என்று புரட்சி இயக்கங்கள் தோன்றுகின்றன. சமூகத்தில் யாரும் பட்டினி கிடக்கவேண்டாத நிலை இருப்பின், புரட்சி இயக்கங்கள் அதிகம் தலைதூக்குமா?

'துலாபாரம்' கதையிலே மூன்று குழந்தைகள் உள்ளிட்டு, பல தொழிலாளரும் பட்டினி கிடக்கவேண்டிய நிலையேற்பட்டது பெரிய கண்றாவி. வேலைநிறுத்தக் காரருக்கும், தொழிலாள குடும்பங்களுக்கும் எவ்வித கஷ்ட நிவாரணத்திற்கும் வழிசெய்யப்படவில்லை. அல்லது மானத்துடனே, பிச்சை எடுக்காமல், அவர்கள் உணவு உண்ணவும் வழியில்லை; எக்காரணம் பற்றியும் ஒருவர் பட்டினி கிடக்காதபடி, கோயில் முதலிய புது ஸ்தாபனங்கள் மூலம் வழிவகை செய்வதாயின், அக்குழந்தைகள் பிச்சை எடுக்கவோ, திருடவோ வேண்டிய அவசியம் இருக்குமா? குழந்தைகளின் பசியை ஆற்றமுடியாததால் தான் அத்தொழிலாளியின் குடும்பத்திற்கு அக்கதி ஏற்பட்டது!

பொதுமக்களின் சிந்தனையைத் தூண்டி, ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் அன்னதானத்திற்கான ஒழுங்குகள் செய்யவேண்டிய அவசியத்தை இந்தப் படம் அறிவுறுத்துவதாக இருக்கின்றது. அதற்கான ஒழுங்கு ஏதும் செய்தால்தான் சமூகமும் அமைதியாக வாழமுடியும். படத்தைப் பார்த்துவிட்டு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

0 0 0

கல்கத்தா தெருக்களில் ஏழைகளும் அகதிகளும் படும் கஷ்டங்களை ஒரு பிரெஞ்சுக்காரர் படம் பிடித்து லண்டன் பி. பி. ஸி. டெலிவிஷனில் காட்டினார். இப்படம் இந்தியாவை அவமதிப்பதாகுமென்றும், இதன் மற்ற பகுதிகளைக் காட்டப்படாதென்றும் இந்திய அரசாங்கம், பி. பி. ஸியைக் கேட்டது. ஆனால் இதற்கு அவர்கள் சம்மதிக்காததால் டில்லியிலுள்ள பி. பி. ஸி. நிருபரை வெளியேற இந்தியா உத்தரவிட்டது. அந்தப்படம் குறைகளை மட்டும் காட்டும் முறையில் ஒருபட்சமாக இருக்கிறதென்பது இந்தியாவின் ஆட்சேபம்.

பி. பி. ஸி. நிருபரை இந்தியாவை விட்டு போகச் சொல்லுவதால், பிரச்னை தீர்ந்துவிடப் போவதில்லை. கல்கத்தாவில் மட்டுமல்ல பல தலைநகரங்களிலும் வளர்ந்துள்ள பட்டினி முதலிய சமூகப் பிரச்னைகளை எப்படித் தீர்க்கப் போகிறார்கள் என்பதே முக்கியம். சமுகத்தில் அன்புக்கு இடமில்லாததாலேயே மக்களின் இப் பிரச்னை மலைபோல் வளர்ந்து திகைக்க வைக்கிறது. அன்பும் மனிதாபிமானமும் மக்கள் மனதில் மீண்டும் உதயமானால் இந்தப் பிரச்னை ஏன் தலைதூக்க வேண்டும்

0 0 0

நீ நாளும் நல்நெஞ்சே
நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்
சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூ நாளும் தலைசுமப்பபுகழ்
நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்த
பெறலாமே நல்வினையே

—சம்பந்தர்

## விற்பனைக்கு

காணி

பாசன வசதியுடைய விளைச்சலுள்ள 16 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு விபரங்கட்கு:- த. பெ. எண். 88, கொழும்பு. 2192

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் ... 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org